பக்கங்கள்:-பத்து

Registered as a News paper in Sri Lanka

# வலம்புரி

VALAMPURI

விலை ரூபா. 6.00

சங்கு 04 | வள்ளுவர் ஆண்டு 2034 | மார்கழி 01 | செவ்வாய்க்கிழமை | (16.12.2003) | தொலைபேசி - 2223378 | ஒலி 362

ராம்கோ சீமெந்து

MADRAS CEMENTS LTD

RAMCO CEMENT

ஆசியாக் கண்டத்தில் முதலாம் தரத் தொழிற்சாலையில் இருந்து தயாரிக்கப்பட்டது.

## ஜனாதிபதி - பிரதமர் அதிகார இழுபறிக்கு முடிவு காண

# கால வரையறை இன்றிப் பேச்சுக்களை தொடர உயர் மட்டக்குழு தீர்மானம் ?

(நமது நிருபர்)

**ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவுக்கும், பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவுக்குமிடையிலான அரசியல் அதிகார இழுபறி நிலையை சுமுகமாகத் தீர்த்து வைப்பதற்கு மனோதித்தவெல மலிக்சமர விக்கிரம தலைமையிலான உயர் மட்டக்குழுவிற்கு ஜனாதிபதி விதித்த காலக்கெடு நேற்றுடன் முடிவடைந்த நிலையில் இந்த உயர்மட்டக்குழு நேற்றுப் பிற்பகல் மீண்டும் கூடி காலவரையறையின்றி பேச்சுக்களைத் தொடர்வதற்குத் தீர்மானித்திருப்பதாக ஜனாதிபதியின் ஊடகப் பேச்சாளர் ஜனதாஸ பீரிஸ் தெரிவித்துள்ளார்.**

ஜனாதிபதிக்கும், பிரதமருக்குமிடையிலான அதிகாரப் பிணக்கைத் தீர்த்து வைப்பதற்கு இருவராலும் நியமிக்கப்பட்ட மலிக்சமரவிக்கிரம-மனோதித்தவெல உயர் மட்டக் குழு பல சுற்றுப் பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்டுவந்தபோதும் முடிபுகள் எதுவும் எட்டப்படாத நிலையில் அப்பேச்சுவார்த்தைகள் முடிவடைந்துள்ளன.

ஜனாதிபதி விதித்த காலக்கெடு நேற்றுடன் முடிவடைந்த போதும், பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவுடன் இணக்கப்பாடு ஒன்றைக் காண்பதில் சந்திரிகா குமாரதுங்கா ஆர்வமாக இருப்பதை அடுத்து நேற்று மீண்டும் இந்த உயர் மட்டக் குழு கூடி இணக்கப்பாட்டை எட்டுமளவி

(10ம் பக்கம் பார்க்க)

## கூட்டணி அமைப்பது ஸ்ரீ-சு-கட்சிக்கு புதுமையில்லை

(கொழும்பு)

நாட்டின் ஒருமைப்பாட்டைப் பேணிப் பாதுகாக்கவும் சகல இன மக்களினது உரிமைகளைப் பேணவும் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி ஐக்கிய தேசியக் கட்சியின் எதிரணிகளுடன் இணைந்து செயலாற்ற உள்ளதாக எதிர்க் கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

கண்டி மாகயயாவில் நடைபெற்ற ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் கூட்டமென்றில் உரையாற்றும் போதே எதிர்க் கட்சித் தலைவர் மகிந்தராஜபக்ஷ மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அங்கு அவர் தொடர்ந்து உரையாற்றுகையில் கூறியதாவது,

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி கூட்டமைப்பது புதுமையான விடயமல்ல. 1956ம் ஆண்டு பிலிப் குணவர்த்னா, டபிள்யு.தகநாயக்கா ஆகியோருடன் கூட்டுச் சேர்ந்து ஆட்சி அமைத்து

(10ம் பக்கம் பார்க்க)

அதிரடிப்படை-விடுதலைப் புலிகள் சந்திப்பு

## திருக்கோயில், காஞ்சிரங்குடா முகாம்களை மாற்ற இணக்கம்

(அம்பாறை)


விசேட அதிரடிப்படையினருக்கும், தமிழீழ விடுதலைப்புலிகளின பிரதிநிதிகளுக்குமிடையே சுமுகமான உறவைப் பேணுவதென நேற்று நடைபெற்ற கூட்டமொன்றில் இணக்கப்பாடு காணப்பட்டதாக அம்பாறை மாவட்ட கண்காணிப்புக் குழுவின் பதில் தலைவர்கிறிஸ்ரோ குஜாலா தெரிவித்துள்ளார்.

அம்பாறை விசேட அதிரடிப் படையினருக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்குமிடையே நேற்று அக்கரைப்பற்றில் உள்ள யுத்த நிறுத்தக் கண்காணிப்புக்குழு அலுவலகத்தில் நடைபெற்ற கூட்டமொன்றிலேயே இந்த இணக்கப்பாடு காணப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

நேற்றுக் காலை 10 மணி முதல் நணபகல் 12 மணிவரை நடை பெற்ற இக் கூட்டத்தில் தமிழீழ விடுதலைப் புலிகளின் சார்பில் மட்டக்களப்பு அம்பாறை மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் கௌசல்யன்

(10ம் பக்கம் பார்க்க)

## ஜப்பானின் விசேட தூதுவர் அகாஷி அடுத்த மாதம் இலங்கை வருவார்



(கொழும்பு)

நாட்டில் ஏற்பட்டிருக்கும் முட்டுக்கட்டை நிலையைப் போக்கும் விதத்தில் பேச்சுக்களை நாடத்தவென ஜனவரி மாத நடுப்பகுதியில் ஜப்பானின் விசேட சமாதானத் தூதுவர் யசூசி அகாஷி இலங்கை வரவுள்ளார். இதனை இலங்கை வெளியுறவு அமைச்சு உறுதி செய்துள்ளது.

கடந்த யூன் மாதம் நடைபெற்ற டோக்கியோ மாநாட்டில் உறுதியளிக்கப்பட்ட நிதிகளை வழங்கும் சாத்தியக் கூறுகள் பற்றி இவர் ஆராயவுள்ளார். அத்துடன் டோக்கியோ மாநாட்டின் தீர்மானங்களை அமுல் செய்வதற்கான வழிவகைகள் குறித்தும் அவர் இங்கு ஆராயவுள்ளார்.

இதேவேளை இலங்கையின் தென் பகுதியில் ஏற்பட்டிருக்கும் அரசியல் குழப்ப நிலை காரணமாக டிசம்பர் 12ந் திகதி நடைபெறவிருந்த சர்வதேச நாணய நிதியத்தின் முன்னேற்றத்தை மதிப்பிடும் கொழும்புக் கூட்டம் நாள் குறிப்பிடப்படாமல் ஒத்திவைக்கப்பட்டுள்ளது. இது குறித்தும் ஆராயவுள்ள அகாஷி, ஜனாதிபதி, பிரதமர், அமைச்சர் ஜி.எல்.பீரிஸ், மிலிந்த மொறகொட, தமிழ்த் தலைவர்கள் மற்றும் விடுதலைப் புலிகளின் தலைவர்கள் ஆகியோரைச் சந்திக்கவுள்ளதாக இராஜதந்திர வட்டாரங்கள் தெரிவித்தன. (இ-6)

## கண்காணிப்புக் குழுவின் கடமையை ரெலிவ்சன் ஒஸ்லோவிலிருந்து ஆற்றுகிறார்

## நாடுதழுவிய ரீதியில் சுகாதாரத் துறை ஊழியர்கள் நேற்று வேலை நிறுத்தம்

## முகாம்களை மாற்ற இணக்கம்

(அம்பாறை)

விசேட அதிரடிப்படையினருக்கும், தமிழீழ விடுதலைப்புலிகளின பிரதிநிதிகளுக்குமிடையே சுமுகமான உறவைப் பேணுவதென நேற்று நடைபெற்ற கூட்டமொன்றில் இணக்கப்பாடு காணப்பட்டதாக அம்பாறை மாவட்ட கண்காணிப்புக் குழுவின் பதில் தலைவர்கிறிஸ்ரோ குஜாலா தெரிவித்துள்ளார்.

அம்பாறை விசேட அதிரடிப் படையினருக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்குமிடையே நேற்று அக்கரைப்பற்றில் உள்ள யுத்த நிறுத்தக் கண்காணிப்புக்குழு அலுவலகத்தில் நடைபெற்ற கூட்டமொன்றிலேயே இந்த இணக்கப்பாடு காணப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

நேற்றுக் காலை 10 மணி முதல் நணபகல் 12 மணிவரை நடை பெற்ற இக் கூட்டத்தில் தமிழீழ விடுதலைப் புலிகளின் சார்பில் மட்டக்களப்பு அம்பாறை மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் கௌசல்யன்

(10ம் பக்கம் பார்க்க)



நாட்டில் ஏற்பட்டிருக்கும் முட்டுக்கட்டை நிலையைப் போக்கும் விதத்தில் பேச்சுக்களை நாடத்தவென ஜனவரி மாத நடுப்பகுதியில் ஜப்பானின் விசேட சமாதானத் தூதுவர் யசூசி அகாஷி இலங்கை வரவுள்ளார். இதனை இலங்கை வெளியுறவு அமைச்சு உறுதி செய்துள்ளது.

கடந்த யூன் மாதம் நடைபெற்ற டோக்கியோ மாநாட்டில் உறுதியளிக்கப்பட்ட நிதிகளை வழங்கும் சாத்தியக் கூறுகள் பற்றி இவர் ஆராயவுள்ளார். அத்துடன் டோக்கியோ மாநாட்டின் தீர்மானங்களை அமுல் செய்வதற்கான வழிவகை ...வுள்ளார்.

இதேவேளை இலங்கையின் தென் பகுதியில் ஏற்பட்டிருக்கும் அரசியல் குழப்ப நிலை காரணமாக டிசம்பர் 12ந் திகதி நடைபெறவிருந்த சர்வதேச நாணய நிதியத்தின் முன்னேற்றத்தை மதிப்பிடும் கொழும்புக் கூட்டம் நாள் குறிப்பிடப்படாமல் ஒத்திவைக்கப்பட்டுள்ளது. இது குறித்தும் ஆராயவுள்ள அகாஷி, ஜனாதிபதி, பிரதமர், அமைச்சர் ஜி.எல்.பீரிஸ், மிலிந்த மொறகொட, தமிழ்த் தலைவர்கள் மற்றும் விடுதலைப் புலிகளின் தலைவர்கள் ஆகியோரைச் சந்திக்கவுள்ளதாக இராஜதந்திர வட்டாரங்கள் தெரிவித்தன. (இ-6)

# கண்காணிப்புக் குழுவின் கடமையை ரெலிவ்சன் ஒஸ்லோவிலிருந்து ஆற்றுகிறார்

## நோர்வே பத்திரிகை தகவல்

(கொழும்பு)

போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுத் தலைவர் ரெலிவ்சன் தொடர்ந்தும் அதே பதவியிலேயே தற்போதும் இருப்பதாகவும், ஆனால் ஒஸ்லோவிலிருந்து அவர் பணியைத் தொடர்வதாகவும் நோர்வேப் பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

ஆனால் அதற்கு முரணாக தற்போதைய கண்காணிப்புக் குழுத் தலைவர் ஹாக்லாண்ட் கருத்து வெளியிட்டுள்ளார். ரெலிவ்சன் நோர்வேயில் ஆலோசகராக மட்டுமே செயற்படுகிறார். அவர் ஒஸ்லோவிலிருந்து ஒரு அறிவுறுத்தல்களையும் வழங்க முடியாது. பதில் தலைவரே இங்குள்ள நிலைமையைக் கவனித்தல் வேண்டும் என்றார். சம்பந்தப்பட்ட தரப்பினரின் முழு ஒத்துழைப்பையும் பெறும் பணியை ஒஸ்லோவில் இருந்தபடி நிறைவேற்ற முடியாது என்றும் ஹாக்லாண்ட் தெரிவித்தார்.

ஜனாதிபதி சந்திரிகாகுமாரதுங்கா சமாதான செயற்பாடுகளில் தனது செல்வாக்கை ஏற்படுத்த முனைகிறார் என்று தெரிவித்திருந்த ரெலிவ்சன் இது தொடர்பில் தனது விரக்தியையும் வெளிப்படுத்தினார்.

இதனாலேயே நாட்டின் இறைமைக்கு பாதகமாக செயற்படுவதாக குற்றஞ்சாட்டி ரெலிவ்சனை ஜனாதிபதி நிராகரித்திருந்தார். இதன்படி கடந்த ஒக்ரோபர் 23ந் திகதி நோர்வே வெளியுறவு அமைச்சர் பீற்றர்சனுக்கு எழுதிய கடிதத்தில் ஜனாதிபதி ரெலிவ்சனை கண்காணிப்புக்குழுத் தலைவர் பதவியிலிருந்து அகற்றுமாறு கோரியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ-6)

# நாடுதழுவிய ரீதியில் சுகாதாரத் துறை ஊழியர்கள் நேற்று வேலை நிறுத்தம்

## வழமையான பணிகள் பாதிப்பு

(நமது நிருபர்)


வடக்குக் கிழக்கு உட்பட நாட்டின் சகல பாகங்களிலும் உள்ள அரசாங்க ஆஸ்பத்திரிகளில் கடமை புரியும் ஊழியர்கள் நேற்று ஒரு நாள் சுகவீன லீவுப் போராட்டத்தில் ஈடுபட்டிருந்தனர் இதனால் நோயாளர்கள் பெருமளவில் பாதிக்கப்பட்டிருந்தனர்.

சம்பள முரண்பாட்டு விவகாரத்தை முன்வைத்து சுகாதாரத் துறை ஊழியர்கள் நேற்று பாராளுமன்ற சுற்றுவட்டத்திற்கு முன்பாக மறியல் போராட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்.

இந்த முரண்பாட்டு விடயத்தைத் தீர்த்து வைப்பதற்காக சுகாதார அமைச்சர் கூறியிருந்த போதும் அது தொடர்பாக எந்தவிதமான நடவடிக்கைகளும் எடுக்காமல் விட்டமையையடுத்தே சுகாதார ஊழியர்கள் மேற்படி போராட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்.

சுகாதார ஊழியர்களின் இந்தப் போராட்டத்தினால் கொழும்பு தேசிய வைத்தியசாலையின் பணிகள் பாதிக்கப்பட்டிருந்தாக தேசிய வைத்தியசாலையின் பணிப்பாளர் தெரிவித்தார்.

(10ம் பக்கம் பார்க்க)



நேற்று யாழ்ப்பாணத்தில் சுகாதார ஊழியர்கள் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டதால் வைத்தியசாலைப் பணிகளை நோயாளர்களின் உறவினர்கள் மேற்கொள்வதைப் படங்களில் காணலாம்.

## யாழ்.பாதுகாப்பு தலைமையகம் விளக்கம்

(யாழ்ப்பாணம்)

வடமராட்சி கிழக்கு மணற்காட்டுப் பகுதியில் படையினர் மிதிவெடிகளை புதைத்து வருகின்றனர் என்று வெளியான செய்தியை யாழ். பாதுகாப்பு நடவடிக்கைத் தலைமையகம் மறுத்துள்ளது.

கடந்த 8ந் திகதி வெளியான மேற்படி செய்தி உண்மைக்குப் புறம்பானதென்றும், மிதிவெடிகள் யுத்தம் நடைபெற்ற காலத்தில் பல வருடங்களுக்கு முன்னர் புதைக்கப்பட்டவை என்றும் நடவடிக்கைத் தலைமையகம் தெரிவித்துள்ளது. (இ)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

## புத்திர சிகாமணி எம்.பி.சபையில் நித்திரை வெளியான செய்தி குறித்து ஆராயுமாறு

# பொ.ஐ.மு. உறுப்பினர் கோரிக்கை

(கொழும்பு)

பாராளுமன்ற உறுப்பினர் வீ.புத்திரசிகாமணி வரவு செலவுத்திட்ட விவாதத்தின் போது சபையில் ஆழ்ந்த நித்திரையில் இருந்ததாக பத்திரிகை ஒன்றில் வெளியான செய்தி மற்றும் புகைப்படம் தொடர்பாக ஆராயுமாறு பொதுஜன ஐக்கிய முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர் ஜெயராஜ் பெர்னாண்டோபுள்ளே சபாநாயகர் ஜோசப் மைக்கல் பெரேராவைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

பாராளுமன்றத்தில் நேற்றுச் சிறப்பு நிலைக்கேள்வி ஒன்றை எழுப்பியே மேற்படி பாராளுமன்ற உறுப்பினர் இதனைக் கேட்டுள்ளார்.

அத்துடன் நித்திரையில் இருந்த புத்திரசிகாமணியை சபையில் புகைப்படம் பிடிப்பதற்கு புகைப்பிடிப்பாளர் ஒருவருக்கு யார் அனுமதி கொடுத்தது எனவும், .

புகைப்படப் பிடிப்பாளர் புகைப்படக் கருவியை பாராளுமன்றத்தினுள் கொண்டுவருவதற்கு யார் அனுமதி வழங்கியது? எனவும் கேள்விகள் எழுப்பினார்.

புத்திரசிகாமணியின் இந்தப் படமும் செய்தியும் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதன் மூலம் அவரது சிறப்பு உரிமை மீறப்பட்டுள்ளதாக அவர் குற்றம் சாட்டினார்.

இதேவேளை இப்புகைப்படம் பாராளுமன்றத்தில் வைத்து எடுக்கப்படவில்லையாயின் அது பாராளுமன்றத்தை அவமதிக்கும் செயலாகும்.

இந்த செய்தி பிரசுரிக்கப்பட்டதன் மூலம் பொது ஜன ஐக்கிய முன்னணி பாராளுமன்ற உறுப்பினர்களின் முகத்தில்சேறு பூசப்பட்டுள்ளதாகவும் பாராளுமன்ற உறுப்பினர்களை விமர்சிப்பதாகவும் அமைந்துள்ளது என அவர்மேலும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை இவ்விடயம் தொடர்பாக ஆராய்ந்து உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என சபாநாயகர் உறுதியளித்துள்ளார்.

(தி-61)

### கண்பரிசோதனை முகாம்

(மயிலங்காடு)

றோட்டறிக் கழகத்தின் அனுசரணையுடன் இன்று செவ்வாய்க் கிழமை காலை 9 மணிக்கு புன்னாலைக்கட்டுவன் தெற்கு கணேசா சனசமூக நிலையத்தில் இலவச கண்பரிசோதனை முகாம் ஒன்று நடத்தப்படவுள்ளது. (உ-118)

## ஜனாதிபதி வசமுள்ள அமைச்சுக்களின்

# நிதிஒதுக்கீட்டு விவாத வாக்கெடுப்பு கூட்டமைப்பு எதிர்த்து வாக்களிக்கும்

(கொழும்பு)

பாராளுமன்றத்தில் நாளை இடம்பெறவுள்ள பாதுகாப்பு, உள்துறை, மக்கள் தொடர்பாடல் ஆகிய அமைச்சுக்களுக்கான நிதி ஒதுக்கீட்டு குழுநிலை விவாத வாக்கெடுப்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எதிர்த்து வாக்களிக்கவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க கடந்த மாதம் 4ஆம் திகதி மேற்குறிப்பிட்ட 3அமைச்சுக்களை பொறுப்பெடுத்துள்ளமை முறையற்றது. இதன் மூலம் பாதுகாப்புக்கான செலவீனம் அதிகரிக்கப்பட்டுள்ளது. இதனாலேயே இத்தகையதொரு முடிவினை எடுத்திருப்பதாக கூட்டமைப்பு வட்டாரங்கள் தகவல் வெளியிட்டுள்ளன.

இதேவேளை நாளை இடம்பெறவுள்ள பாதுகாப்பு,உள்துறை, ஊடகத்துறை ஆகிய 3அமைச்சுக்கள் மீதான நிதிஒதுக்கீட்டு குழுநிலை விவாதத்தில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, ஜனாதிபதியின் பிரதிநிதியாகச் செயற்படவுள்ளதாகவும் எதிர்க்கட்சியைச் சேர்ந்த பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் இந்தக்குழு நிலை விவாதத்தை ஆரம்பித்து வைபபார் எனவும் பிரதமர் அலுவலக வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இதே சமயம், ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கமே வரவு செலவுத்திட்டத்தை சமர்ப்பித்தது எனபதால், ஐக்கிய தேசிய முன்னணியைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஆதரவாகவே வாக்களிப்பார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது. அதேபோன்று எதிர்க்கட்சியைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்களும் மற்றும் தமிழ்கட்சிகளான ஈ.பி.டி.பி, ஈ.பி.ஆர். எல்.எவ்.(வரதர் அணி), புளொட் ஆகியவற்றின் நாடாளுமன்ற உறுப்பினர்களும், ஜனாதிபதி வசமுள்ள மூன்று அமைச்சுக்கள் மீதான குழு நிலை விவாத வாக்கெடுப்பிற்கு ஆதரவாக வாக்களிக்கவுள்ளதாக தெரிவித்துள்ளனர். (உ-10)

## யாழ்.மாவட்ட துரிதஅபிவிருத்தி திட்ட ஆலோசனை பெறுதல் கூட்டம் வியாழனன்று

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட துரித அபிவிருத்தி திட்டம்-2004 திட்ட ஆலோசனை பெறுதல் விடயம் தொடர்பாக, யாழ்ப்பாண பிரதேச செயலக ஒருங்கிணைப்பு குழுக்கூட்டம் எதிர் வரும் 18ம் திகதி வியாழக்கிழமை மு.ப.10.00 மணிக்கு யாழ் வை.எம்.சி.எ மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

மேற்படி கூட்டத்தில் இடம் பெயர்ந்த, மீளக்குடியமர்ந்துள்ள மக்களின் அவசியத் தேவைகளை இனம் காணுதலுடன் அவற்றை ஈடுசெய்வதன் மூலம் மக்களின் வாழ்க்கைத்தரத்தை உயர்த்துவதற்கான துரித அபிவிருத்தி திட்டம் ஒன்றை தயாரிப்பதற்கான செயற்திட்ட ஆலோசனைகள் சகல சமூக நிறுவனங்களிடமும் இருந்து பெறப்படவுள்ளன.

எனவே இப்பிரதேச செயலகத்திற்கு உட்பட்ட சகல கிராம அபிவிருத்தி சங்கங்கள், சனசமூக நிலையம், கடற்தொழிலாளர் கூட்டுறவுச் சங்கம், கிராமிய மட்ட புனர்வாழ்வுக்குழு, ஏனைய பொது அமைப்புக்கள் ஆகியவற்றின் ஒவ்வொரு பிரதிநிதிகளை இக் கூட்டத்தில் தவறாது கலந்து கொள்ளுமாறு பிரதேச செயலர் அறிவித்துள்ளார். (உ)

### கலந்துரையாடல்

(சுதுமலை)

யாழ்மாவட்டத்தின் சுகாதார நிலைமைகள் தொடர்பான கலந்துரையாடல் ஒன்று இன்று செவ்வாய்க்கிழமை மு.ப 10.00 மணிக்கு நல்லூர் பிரதேச சபையின் கொக்குவில் உபஅலுவலக கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது.

தமிழீழ சுகாதார சேவை மற்றும் உள்ளூராட்சித் திணைக்களம் ஆகியன ஒன்றிணைந்து நடாத்தவுள்ள மேற்படி கலந்துரையாடலில் குப்பை கூழங்களை அகற்றுதல், பொது மலசலகூட வசதி, பொதுச்சந்தை, வியாபார உரிமம், வடிகால்கள், நுளம்புப் பிரச்சினை, குடிநீர் விநியோகம், மயானங்கள் மற்றும் கொல்களங்கள் உட்பட பொதுவான சுகாதாரப் பிரச்சினைகள் குறித்து விரிவாக ஆராயப்படவுள்ளன. (தி.252.51)

✦ ✦ ✦

(யாழ்ப்பாணம்)

2003/2004 கல்வியாண்டிற்கு பல்கலைக்கழக அனுமதிக்கான தொிவில்,''சற்''புள்ளியிடல் முறையால் பாதிக்கப்பட்ட மாணவர்களுக்கான கலந்துரையாடல்ஒன்று இன்று மு.ப. 11 மணிக்கு யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றிய கேட்போர் கூடத்தில் இடம்பெறவுள்ளது. (உ)

### எழுத்தாளர் சந்திப்பு

(யாழ்ப்பாணம்)

தமிழகத்தில் இருந்து வெளிவரும் 'தீராநதி' இலக்கிய பத்திரிகையின் ஆசிரியர் பீடத்தைச் சேர்ந்த பிரபல எழுத்தாளர் தளவாய் சுந்தரம் யாழ்ப்பாணம் வருகை தந்துள்ளார்.

இவர் யாழ்ப்பாண எழுத்தாளர்கள், வாசகர்கள் ஆகியோரை நாளை மறுதினம் பி.ப 4 மணிக்கு யாழ் பல்கலைக்கழக நாடகத் துறை பிரிவுரை மண்டபத்தில் சந்திக்கவுள்ளார்.

இச்சந்திப்பில் துறைசார்ந்தவர்களை கலந்து கொள்ளுமாறு யாழ். பல்கலைக்கழக ஊடகப் பயிற்சி நிலையம் அழைப்பு விடுத்துள்ளது. (இ)

### விதைகள் வழங்கல்

(பன்னாலை)

பன்னாலை கிராம அலுவலர் பிரிவுக்கு உட்பட்ட விவசாயிகளுக்கு மூவிமெண்டோ நிறுவனம் கடந்த வெள்ளிக்கிழமை வெண்டி, பயிற்றை, கத்தரி மற்றும் பூசணி விதைகளை வழங்கியுள்ளது (உ.32)



# குடாநாட்டவரின் சமாதானக் கனவைச் சிதறடிக்கும் வெளிநாட்டு இராணுவ நிபுணர்களின் வருகை

(கிளிநொச்சி)

யாழ்ப்பாணக் குடாநாடு வெளிநாட்டு இராணுவ நிபுணர்களின் பலப்பரீட்சைக் களமாக மாறிவிடுவதாக அரசியல் அவதானிகள் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பில் மேலும் கருத்து வெளியிட்டிருக்கும் அவதானிகள்,

கடந்த இரண்டு ஆண்டுகளாக யுத்தநிறுத்தம் கடைப்பிடிக்கப்பட்டு வருகின்ற போதும், படையினர் போரிற்குத் தயார்படுத்தப்பட்டு வருகின்றார்கள்.

ஆட்சேர்ப்பு, ஆயுதக் கொள்வனவு ஆகியவற்றில் ஈடுபட்டுவரும் அரசு, வெளிநாட்டு இராணுவ நிபுணர்களை இலங்கைக்கு அழைத்து ஆலோசனைகளைப் பெற்றும் வருகின்றது.

சமாதான காலத்தில் இவையெல்லாம் எதற்காகவென மக்கள் அச்சமுடன் வினாவெழுப்பி வருகின்றனர்.

அது மட்டுமன்றி, தமிழர்கள் செறிந்து வாழும் பிரதேசமான யாழ்.குடாநாட்டிற்கு அமெரிக்கா இந்தியா, பிரித்தானியா, ரஷ்யா ஆகிய நாடுகளின் இராணுவ நிபுணர்கள் சென்று அங்கு அமைந்துள்ள இராணுவ முகாம்களை மதிப்பீடு செய்து நாட்கணக்கில் அங்கு தங்கிநின்று படையினருக்கு சில ஆலோசனைகளையும் பயிற்சிகளையும் வழங்கி வருகின்றார்கள்.

இவர்களின் யாழ்.விஜயங்கள் இரகசியமாகவே வைக்கப்படுகின்றன. இது தமிழ் மக்கள் மத்தியில் இனம்புரியாத பெரும் அச்சத்தையும், அதிருப்தியையும் ஏற்படுத்தியிருக்கிறது. எந்த நேரத்தில் எங்கு யுத்தம் ஆரம்பிக்கப்படுமோ? என்ற அச்சத்தால் வாடும் தமிழ்மக்கள் தமது சமாதானக் கனவு பொய்த்து விடுமோ என ஏங்குகின்றார்கள்.

கடந்த கால யுத்தங்களால் பாதிப்படைந்துள்ள தமிழ் மக்கள், சொந்த இடங்களில் மீள குடியமர முடியாதுள்ள நிலையில் தொடர்ந்தும் முகாம்களில் முடங்கி அவர்கள் அவல வாழ்க்கை வாழ்கின்றார்கள்.

இத்தகைய சூழ்நிலையில் அவர்களை மீளக் குடியமர்த்துவதற்கு பின்னடிக்கும் அரசு, சர்வதேச வல்லரசு நாடுகளின் இராணுவ நிபுணர்களை யாழ்.குடாநாட்டிற்கு அனுப்பி பலப்பரீட்சை நடத்துவது நியாயமற்றதாகவும் இது தமிழ் மக்களை ஏமாற்றுவதாகவும் அமைகின்றது எனத் தெரிவித்துள்ளனர்.

(உ-64,10)

## தமிழ் மக்களின் மனித உரிமைகளுக்கும் அபிவிருத்திக்குமான அமையம் அங்குரார்ப்பணம்

(யாழ்ப்பாணம்)

வடக்கு-கிழக்கில் வாழ்கின்ற தமிழ் பேசும் மக்களின் மனித உரிமைகள், நலன்கள், குடியியல், அரசியல், சமூக பொருளாதார, கலை கலாசார, சுற்றாடல் மற்றும் அபிவிருத்தி சார் செயல்பாடுகளை முன்னெடுப்பதற்காக யாழ்ப்பாணத்தில் புதியதோர் அமையம் நேற்று முன்தினம் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டுள்ளது.

'தமிழ்பேசும் மக்களின் மனித உரிமைகளுக்கும் அபிவிருத்திக்குமான அமையம்' எனும் பெயரில் அங்குரார்ப்பணம் செய்யப்பட்ட இவ் அமைப்பின் முதலாவது கூட்டம் நல்லூர் இளங்கலைஞர் மன்ற மண்டபத்தில் நடைபெற்றது.

இவ்அமைப்பின் இணைப்பாளரான சீ.வீ.கே.சிவஞானம் தலைமையில் இடம் பெற்ற கூட்டத்தில், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் விவசாயபீடாதிபதி கலாநிதி எஸ். இராஜதுரை, கலாநிதி சூசைஆனந்தன், வணபிதா ஏ.ஜ.பெர்னாட் அடிகள், கியூடெக் பணிப்பாளர் வணபிதா சீ.ஜே.ஜெயக்குமார் அடிகள், மனிதநேய அமைப்பு களின் ஒன்றியத்தலைவர் சு.பரமநாதன், இணையத்தின் உபதலைவர் வீ.ஜே. சத்திவேல் இலங்கை தமிழ் ஆசிரியர் சங்கத்தின் சிரேஷ்ட-துணைச் செயலாளர் த.பஞ்சலிங்கம், சர்வதேச மாணவர் ஒன்றியத் தலைவர் எஸ்.கஜேந்திரன் உட்பட பலர் பங்கு பற்றியிருந்தனர்.

இக்கூட்டத்தினைத் தொடர்ந்து இடம்பெற்ற செய்தியாளர் மாநாட்டில் இவ் அமையம் சார்பாக மேற்கொள்ளப்பட்ட தீர்மானங்கள் பற்றி எடுத்து விளக்கப்பட்டது. அவையாவன,

★ இனவிடுதலைப் போராட்டம் சம்பந்தமாக சரியானதும் உண்மையானதுமான தகவல்களையும், விபரங்களையும் தேசிய சர்வதேச மட்டங்களுக்கு வழங்குதல்.

★ புனரமைப்பு செய்யப்பட்ட நிலையில் இருக்கும் யாழ்ப்பாண பொது நூலகத்தினை, முறைப்படியான சம்பிரதாயங்களைத் தவிர்த்து உடனடியாக வாசகர்களுக்கு யாழ்ப்பாணம் மாநகரசபை திறந்துவிட வேண்டும்.

★ பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் கைதுசெய்யப்பட்டு சிறைச்சாலைகளில் தடுத்துவைக்கப்பட்டுள்ள அனைத்து அரசியல் கைதிகளையும் உடனடியாக விடுதலை செய்ய வேண்டும்.

★ இந்திய மத்திய அரசு இலங்கைத்தமிழர் நிலைப்பாட்டில் முரண்பாட்டு அணுகுமுறையைப் பின்பற்றுவதைத் தவிர்த்து, இடைக்கால நிர்வாகத்தை தமிழீழ விடுதலைப் புலிகளிடம் கையளிக்க இலங்கை அரசுக்கு அழுத்தம் கொடுக்க வேண்டும். அதே சமயம் தமிழ்விடுதலைப் புலிகளை பலவீனப்படுத்தும் எந்தவொரு நடவடிக்கையிலும் இந்தியா ஈடுபடக்கூடாது.

★ யாழ்மாவட்டத்தில் உள்ள அதி உயர் பாதுகாப்பு வலயப பிரகடனம் உடன் வாபஸ் பெறப்பட்டு மக்களின் இயல்பு வாழ்க்கை வழிவகை செய்யப்படுவதுடன், மீனவர்கள் மற்றும் விவசாயிகள் தமது தொழில்களை எத்தகைய இடையூறுகள் இன்றியும் செய்யக்கூடிய நிலையை இலங்கை அரசாங்கம் ஏற்படுத்த வேண்டும்.

★ குடாநாட்டுச் சிறுவர், மாணவர்கள் அச்சமின்றி பாடசாலைகளுக்குச் செல்வதற்கு வழிவகை செய்யும் பொருட்டு, பாடசாலைகளுக்கு அண்மையில் இருக்கும் இராணுவ சோதனைச் சாவடிகள் மற்றும் முகாம்கள் உடனடியாக அகற்றப்பட வேண்டும். பாடசாலைகளுக்கு அருகில் இவை இருப்பதும் சிறுவர் துஷ்பிரயோக நடவடிக்கைகளாகும்.

★ தமிழக மீனவர்கள் வடக்கு-கிழக்கு பிரதேசங்களில் அத்து மீறி மீன் பிடிப்பதால் எமது கடல்வளம் அருகிக்கொண்டு போவதுடன், தமிழக மீனவர்களுக்கு இலங்கைத் தமிழர்கள் பற்றிய கசப்புணர்வும் வலுவடைந்து வருகின்றது. இதனைத் தணிக்கும் வகையில் ஏற்பாடுகளைச் செய்யும்படி இந்திய மத்திய அரசு தமிழக அரசுக்கு ஆலோசனை கூறவேண்டும். அத்துடன் இலங்கைக்குச் சொந்தமான கச்சதீவினை தமிழக அரசு குத்தகைக்குக் கோரும் நிலைப்பாட்டுக்கும் முற்றுப்புள்ளி வைக்க வேண்டும்.

(தி-16)

## மது போதையில் நீராடியவர் மரணத்தைத் தழுவிக் கொண்டார்

(கொழும்புத்துறை)

கொழும்புத்துறையில் உள்ள நெடுங்குளத்தில் நீராடிக்கொண்டிருந்த குடும்பஸ்தர் நீரில் மூழ்கி மரணமானார்.

கடந்த சனியன்று பிற்பகல் வேளை இடம்பெற்ற இச் சம்பவத்தில், அரியாலை, சாவியப்பிட்டி வீதியைச் சேர்ந்த சிவகுரு செல்வராசா (வயது 49) என்ற ஐந்து பிள்ளைகளின் தந்தையே மரணமடைந்தவராவார்.

மேற்படி நபர் குளத்தில் நீராடிய சமயம் மதுபோதையில் இருந்தார் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, யாழ்.பல்கலைக்கழக கலைப்பீட இறுதியாண்டு மாணவன் ஒருவனும் கடந்த வார இறுதிப் பகுதியில், சந்திரசேகரப் பிள்ளையார் ஆலய தீர்த்தக்கேணியில் நீராடிய சமயம் நீரில் மூழ்கி மரணமடைந்தமை தெரிந்ததே. (உ-51)

## இரங்கல் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

நலலை திருஞானசம்பந்தர் ஆதீன ஏற்பாட்டில், எதிர்வரும் ஜனவரி மாதம் 9ஆம் திகதி அமரர் மா. த.ந.வீரமணி ஐயரின் இரங்கல் கூட்டமும் திருவுருவப்படத் திரைநீக்கமும் இடம்பெறவுள்ளது.

ஆதீன கலாமண்டபத்தில் இடம் பெறவுள்ள இந் நிகழ்வு இராமநாதன் நுண்கலைத்துறை, இசைத்துறை தலைவர் நா.வீ.மு.நவரத்தினம் தலைமையில் நடைபெறவுள்ளது.

(உ)

## எல்லைப்படை மாவீரர் ஞாபகார்த்த கால்பந்தாட்டப் போட்டி – ஒரு நோக்கு

எல்லைப்படை மாவீரர் ஞாபகார்த்தமாகத் தமிழீழ விளையாட்டுத் துறையினர் வலிகாமம் உதைப்பந்தாட்ட லீக்குடன் இணைந்து நடாத்தி வந்த கால்பந்தாட்டச் சுற்றுப் போட்டியின் இறுதியாட்டத்தில் இளவாலை யங்ஹென்றீஸ் விளையாட்டுக்கழகம் வெற்றிபெற்றுள்ளது.

நேற்று முன்தினம் இரவு சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி மைதானத்தில் மின்னொளியில் நடாத்தப்பட்ட இறுதிப் போட்டியில் நாவந்துறை சென்.மேரிஸ் விளையாட்டுக்கழகத்தை 4:2 என்ற தண்டஉதை கோல்களால் வெற்றிகொண்டதன் மூலம் யங்ஹென்றீஸ் விளையாட்டுகழகம் சம்பியனாகத் தெரிவாகியுள்ளது.

மேலும், அன்றைய தினம் மட்டக்களப்பு மாவட்ட அணிக்கும், வலிகாமம் உதைபந்தாட்ட லீக் தெரிவு அணிக்குமிடையில் நடைபெற்ற காட்சிப்போட்டி 1:1என்ற கோல் கணக்கில் வெற்றி தோல்வியின்றி நிறைவடைந்தது.

யாழ்.மாவட்டத்தில் நீண்ட நாட்களின் பின்னர் மின்னொளியில் நடாத்தப்பட்டு வந்த இப்போட்டியின் அரையிறுதிப் போட்டியில் நவாந்துறை சென்.மேரிஸ் விளையாட்டுக் கழகமானது, யங்கம் பண்ஸ் விளையாட்டுக் கழகத்துடனான போட்டியின் போது 5:0என்ற கோல்கணக்கில் வெற்றிபெற்றதன் மூலமும், மற்றைய அரையிறுதிப் போட்டியில் இளவாலை யங்ஹென்றீஸ் விளையாட்டுக் கழகமானது நாவாந்துறை சென்நீக்கிலஸ் விளையாட்டுக் கழகத்துடனான போட்டியில் 2:1என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றும் இறுதிப் போட்டிக்குத் தெரிவாகி இருந்தன.

தொடர்ந்து கடந்த சனிக்கிழமை நடைபெற்ற 3ஆம் இடத்திற்கான போட்டியில் நாவாந்துறை சென். நீக்கிலஸ் விளையாட்டுக்கழகம் அதனை எதிர்த்தாடிய யங்கம் பண்ஸ் விளையாட்டுக்கழகத்தினை 7:0என்ற கோல் கணக்கில் வெற்றி கொண்டு 3ஆம் இடத்தினை பெற்றிருந்தது.

இதேவேளை, நேற்று முன்தினம் முன்னிரவு நடைபெற்ற காட்சிப் போட்டியில் வலிகாம் லீக் தெரிவு அணியினர் தம்மை எதிர்த்து விளையாடிய மட்டக்களப்பு மாவட்ட அணிக்கெதிராக முதலாவது கோலை போட்டியின் ஆரம்பத்தில் பெற்றுக்கொண்டனர். வலிகாமம் லீக் அணிசார்பாக சுதர்சன் இந்தக் கோலைப் பெற்றுக் கொடுத்திருந்தார்.

தொடர்ந்து, இடைவேளைக்கு சற்று முன்னதாக மட்டக்களப்பு மாவட்ட அணி வீரர் தஸ்லீம் தனது அணிக்காக ஒரு கோலைப் பெற்றுக் கொடுத்து 1:1என்ற கோல்கணக்கில் சமப் படுத்திக் கொண்டனர்.

இடைவேளை நேரத்தின் பின்னர் பலமாக முயன்றும் இரு அணிகளுமே கோலைப் பெறமுடியாது போக, இவ் காட்சி ஆட்டம் 1:1என்ற சமநிலை கோல்களுடன் வெற்றி தோல்வியின்றி நிறைவடைந்தது.

தொடர்ந்து நடைபெற்ற இறுதிப் போட்டியில் நாவாந்துறை சென். மேரிஸ் கழகமும், இள்வாலை யங் ஹென்றீஸ் கழகமும் மோதிக்கொண்டன. போட்டியின் இடை நேரம்வரை எந்த அணியும் கோல்களைப் பெற முடியாது போக, ஆட்டம் மேலும் விறு விறுப்படைந்தது.

இடைவேளை நேரத்தின் பின்னர் போட்டியின் 36வது நிமிடத்தில் யங்ஹென்றீஸ் கழகத்திற்காக கலிங்டன் முதலாவது கோலைப் பெற்றுக் கொடுக்க யங்ஹென்றீஸ் கழகம் முன்னணி வகித்தது.

எனினும், போட்டியின் 51வது நிமிடத்தில் சென்.மேரிஸ் கழகத்திற்காக அஜந்தன் ஒரு கோலைப் போட்டு ஆட்டத்தைச் சமப்படுத்தினார். பின்னர் ஆட்டநேர முடிவுவரை இரு அணிகளும் பலமாக முயன்றும் கோல்கள் எதையும் பெறமுடியாது போகவே ஆட்டம், தண்ட உதை மூலமாக வெற்றி தோல்வி தீர்மானிக்கப்பட்டது. இதில் யங்ஹென்றீஸ் கழகம் சென்.மேரிஸ் கழகத்தை 4:2என்ற தண்ட உதை கோல்கள் மூலமாக வெற்றிகொண்டு சம்பியனாகத் தெரிவானது.

நீண்ட நாட்களின்பின் மின்னொளியில் நடாத்தப்பட்ட இப்போட்டிகளைப் பார்ப்பதற்காக ஆயிரக்கணக்கான இரசிகர்கள் திரண்டு வந்திருந்தனர். யாழ்.மாவட்டத்தில் மிக நீண்ட நாட்களின் பின்னர் உதைபந்தாட்டப் போட்டியில் பெருந்திரளான இரசிகர்கள் கலந்துகொண்ட போட்டியாகவும் இப்போட்டி அமைந்திருந்தது.


இப் போட்டிக்கு பிரதம விருந்தினராக ஆசிய மட்ட தடகளப் போட்டியில் உயரம் பாய்தல் நிகழ்ச்சியில் புதியசாதனையை நிலைநாட்டியிருந்த முன்னாள் மெய்வல்லுநரான கலாநிதி எதிர் வீரசிங்கம் கலந்துகொண்டார். மேலும் தமிழீழ விளையாட்டுத் துறைப்பொறுப்பாளர் பாப்பா, யாழ்.மாவட்ட விளையாட்டுத் துறைப் பொறுப்பாளர் மாதுளன் ஆகியோரும் கலந்து சிறப்பித்தனர்.

கடந்த மாதம் 10ஆம் திகதி ஆரம்பமாகி நடைபெற்றுவந்த இப் போட்டி நிகழ்வில், 52 அணிகள் கலந்துகொண்டிருந்தமையுடன், ஆயிரத்திற்கும் மேற்பட்ட வீரர்களும் பங்கு பற்றி இருந்தனர். மொத்தமாக 53போட்டிகள் நடைபெற்றன.

53போட்டிகளிலும் சிறந்த வீரர்களுக்கான பதக்கங்கள் வழங்கி கௌரவிக்கப்பட்டதுடன், முதலாம் இடத்தைப் பெற்ற அணியின் வீரர்கள் அனைவருக்கும் உதைபந்தாட்டக் காலணிகளும், 2,3ஆம் இடங்களைப் பெற்ற அணிகளுக்கு உதைபந்தாட்ட ஜேசிகளும் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

மேலும் இறுதிப் போட்டியின் சிறந்த வீரரான இளவாலை யங் ஹென்றீஸ் விளையாட்டுக் கழகத்தைச் சேர்ந்த குயின்ரனும், அனைத்துப் போட்டிகளுக்குமான சிறந்த ஆட்ட வீராக நாவாந்துறை சென். மேரிஸ் கழகத்தைச் சேர்ந்த யேசுதாசனும் தெரிவுசெய்யப்பட்டனர். இப் போட்டித் தொடரில் பங்குபற்றிய கழகங்களில் மணல்காடு சென். மேரிஸ் கழகமானது சிறந்த கழகமாகத் தெரிவுசெய்யப்பட்டு பரிசு வழங்கப்பட்டது.

தொகுப்பு: தஜி



இங்கிலாந்துடனான இரண்டாவது டெஸ்ட் கிரிக்கெற் போட்டி முடிவில் கூடிக் குதூகலிக்கும் இலங்கை அணி வீரர்கள்.

## விளையாட்டுச் செய்திகள்



அயர்லாந்து டப்ளின் நகரத்தில் கடந்த சனிக்கிழமைநடைபெற்ற ஐரோப்பிய ஷார்ட் கோர்ஸ் நீச்சல் போட்டியில் ஆடவர் 100மீ. பரிஸ்டைஸ் பிரீவில் முதலிடம் பெற்ற மகிழ்ச்சியில் போலந்தின் பீட்டர் வி.டி.ஹீகென்பாண்ட்.

# மக்களின் நலன் கருதி விடுதலைப் புலிகளால் வெளியிடப்பட்டுள்ள தீர்வை மாற்றங்கள்

**மக்களின் வாழ்க்கைச் செலவைக் குறைப்பதற்காக தமிழீழ விடுதலைப்புலிகளினால் நேற்று வெளியிடப்பட்டுள்ள வரிவிலக்கு மற்றும், வரிக்குறைப்புத் தொடர்பான விபரப்பட்டியல் பின்வருமாறு:-**

**தீர்வை நீக்கம்**

## 2004.01.01 ஆம் நாளிலிருந்து நடைமுறைக்கு வரும் தீர்வை மாற்றங்கள்

| | வகை | தீர்வை |
|---|---|---|
| 16. கருவிகள் | 01. கடற்றொழிற் கருவிகள் | இல்லை |
| | ★ வலைகள், பிணைகள், மிதப்பிகள், கருவிகள் | |
| | 02. வேளாண் தொழில்சார் கருவிகள் | |
| | ★ சொட்டு நீர்ப்பாசனக் கருவிகளும் குழாய் வகைகளும் | |
| | ★ கப்ளிங், புட்வால்வ் | இல்லை |
| | ★ அல்கத்தீன் குழாயும் இணைப்பும் | |
| | ★ தெளிகருவி | |
| | ★ மண்வெட்டி, முள்ளுமண்வெட்டி | |
| | ★ அரிவாள் | |
| | ★ காட்டுக்கத்தி | |
| | ★ கலப்பை | |
| | 03. தொழில்சார் கருவிகள் | |
| | 04. மழிக்கும் கருவிகள் | |
| | 05. நிறுத்தல், முகத்தல் அளவைக் கருவிகள் | 10.0% |
| | 06. அலுவலகக் கருவிகள் | 10.0% |
| | 07. மாணவர் பயன்பாட்டுக் கருவிகள் | 10.0% |
| | ★ சோக், சித்திரக் கலர், தூரிகை | 20.0% |
| | ★ கருவிப்பெட்டி, சீவிலிக்கூடு, அடிமட்டம் | இல்லை |
| | ★ பென்சில், பேனா, அழிஇறப்பர் | |
| 17. உதிரிகள் | 01. வெளியிணைப்புப் பொறி உதிரிகள் | 10.0% |
| | 02. இழுபொறி உதிரிகள் | 10.0% |
| | 03. உழவுச்சிற்றூர்தி உதிரிகள் | 10.0% |
| | 04. ஊர்தி உதிரிகள், பொறி உதிரிகள் | 15.0% |
| 18. எரிபொருளும் உராய்வு நீக்கியும், தீப்பெட்டியும். | 01. விறகு | இல்லை |
| | 02. மண்நெய் | இல்லை |
| | 03. பெற்றோல் (இலீற்றர் ஒன்றிற்கு) | ரூபா 5/- |
| | 04. டீசல் (இலீற்றர் ஒன்றிற்கு) | ரூபா 5/- |
| | 05. உராய்வு நீக்கிகள் | 7.5% |
| | 06. சமயல் எரிவாயு | 12.5% |
| | 07. தீப்பெட்டி | ரூபா 0.25/- |
| 19. மின்னியல் பொருள்கள, இலத்திரனியற் பொருள்கள், உதிரிகள் | 01. மின்னியற் பொருள்களும் உதிரிகளும் | 15.0% |
| | 02. இலத்திரனியல் பொருள்களும் உதிரிகளும் | 15.0% |
| | 03. மின்கலங்கள் | 15.0% |
| 20. கதிரொளி மின்னாக்கித் தொகுதி | 01. கதிரொளி மின்னாக்கித் தொகுதி | 12.5% |
| 21. பொதிசெய் பொருள்கள, அடைக்கும் பொருள்கள் | 01. பொதி கட்டும் தாள்களும் தாட்பைகளும் | 10.0% |
| | 02. சாக்கு, நெகிழப்பை (கிலோ ரூபா 50/- இற்கு உட்பட்டவை) | ரூபா 0.50/- |
| | 03. சாக்கு, நெகிழப்பை (கிலோ ரூபா 50/- இற்கு மேற்பட்டவை) | ரூபா 1/- |
| | 04. உணவுத்தாள், சொப்பிங்பை, பொலித்தீன் | 20.0% |
| | 05. மதுபான, குளிர்பானப் போத்தல் மூடிகள் | 10.0% |
| | 06. வெற்றுக் கலன்கள் | 10.0% |
| | 07. காஸ் சிலிண்டர் | இல்லை |
| 22. கயிறு வகை | 01. தும்புக் கயிறு | 10.0% |
| | 02. நயிலோன் கயிறு | 10.0% |
| | 03. சணல் | 10.0% |
| 23. காலணிகள் | 01.காலணிகள் | 10.0% |
| 24 அழகூட்டும், மெருகூட்டும் பொருள்கள் | 01.அணிகலன்கள் | 15.0% |
| | 02.அழகூட்டும் மெருகூட்டும் பொருள்கள் | 20.0% |
| 25.வெற்றிலை, பாக்கு | 01.வெற்றிலை பாக்கு | 10.0% |
| 26.வெறியூட்டும் பொருள்கள் | 01.வெண்சுருட்டு (ஒன்றிற்கு) | ரூபா 0.35/- |
| | 02. பீடி, சுருட்டு | 20.0% |
| | 03. மதுபானம் | 25.0% |
| | 04. லேகியம் | 25.0% |
| 27. மெழுகுதிரி | 01.மெழுகுதிரி | இல்லை |
| 28. கற்பூரம் | 01.கற்பூரம் | இல்லை |
| 28. பத்தி, சாம்பிராணி, தசாங்கம் | 01. பத்தி, சாம்பிராணி, தசாங்கம் | 25.0% |
| 30. வெடி | 01.வெடி | 25.0% |
| 31. ஏனையவை | 01.ஏனையவை | 15.0% |

## மக்கள் பயணத்தின்போது தமது வீட்டுப் பயன்பாட்டிற்கென கொண்டுவரும் பொருள்கள் மீதான தீர்வை விலக்கு

01. இப்படியலில் குறிப்பிடப்பட்டிருக்கும் பொருள்களின் தீர்வை விலக்கு அளவுக்கு அல்லது அதன் பெறுமதிக்கமைவாக ஏதாவது நான்கு வகைப் பொருட்களைப் பயணி ஒருவர் தமது வீட்டுப் பயன்பாட்டிற்கெனக் கொண்டு வரும்போது அப்பொருள்களுக்குத் தீர்வை விலக்களிக்கப்படும்.

| பொருள் விரிப்பு | அளவு | அலகு | பெறுமதி |
|---|---|---|---|
| 01. வானொலிப் பெட்டி அல்லது ஒலிப்பதிவும் பெட்டி | 01 | தனி | ரூபா 6,500/-இற்குட்பட்டது |
| 02. ஈருருளி ஒன்று (பொருத்தப்பட்ட தேவையான இணைப்புகளுடன்) அல்லது ரூபா 2,000/- பெறுமதிக்குட்பட்ட ஈருருளி உதிரிகள் | | | |
| 03. புகைப்படக் கருவி | 01 | தனி | ரூபா 35,000/-இற்குட்பட்டது |
| 04. மின்சூழுக்கான மின்கலங்கள் | 06 | தனி | |
| 05. உடையழுத்தி | 01 | தனி | |
| 06. கதிரைகள் 6 மேசை ஒன்றும் கொண்ட தொகுதி | 01 | தொகுதி | ரூபா 2,750/-இற்குட்பட்டது |
| 07. மெத்தை | 01 | தனி | |
| 08. காற்றுக்கனையா விளக்கு (அரிக்கன் லாம்பு) | 01 | தனி | |
| 09. பெற்றோமாக்ஸ் | 01 | தனி | |
| 10. மண்ணெய் அடுப்பு, 11. மின்னடுப்பு, 12. எரிவாயு அடுப்பு } என்பவற்றில் ஏதாவது ஒன்று | 01 | தனி | |
| 13. நீர் சூடாக்கி | 01 | தனி | |
| 14. கலக்கி | 01 | தனி | |
| 15. கப்பி | 01 | தனி | |
| 16. கத்தி | 02 | தனி | ஒன்று ரூபா 300/-இற்குட்பட்டது |
| 17. மண்வெட்டி | 01 | தனி | |
| 18. கோடரி | 01 | தனி | |
| 19. பிக்கான் | 01 | தனி | |
| 20. அரிதட்டு | 01 | தனி | |
| 21. சுளகு | 01 | தனி | |
| 22. விளக்குமாறு | 01 | தனி | |
| 23. துடைப்பம் | 02 | தனி | |
| 24. பிட்டுப்பானையும், பிட்டுக்குழலும் | 01 | தொகுதி | |
| 25. தாச்சி | 01 | தனி | ரூபா 400/-இற்குட்பட்டது |
| 26. இட்டலிச்சட்டி | 01 | தனி | ரூபா 500/-இற்குட்பட்டது |
| 27. உரலும் உலக்கையும் | 01 | தனி | |
| 28. அம்மியும் குளவியும் | 01 | தனி | ரூபா 1,500/-இற்குட்பட்டது |
| 29. ஆட்டுக்கல் | 01 | தனி | ரூபா 1,500/-இற்குட்பட்டது |
| 30. தோசைக்கல் | 01 | தனி | |
| 31. கேத்தில் | 01 | தனி | |
| 32. துருவுபலகை | 01 | தனி | |
| 33. அரிக்கன் சட்டி | 01 | தனி | |
| 34. சாப்பாட்டுத் தட்டு (வெள்ளி, நெகிழம்) | 1/2 | டசின் | |
| 35. தண்ணீர்க்குவளை (வெள்ளி, நெகிழம்) | 1/2 | டசின் | |
| 36. பெரிய தண்ணீர்க் குவளை | 02 | தனி | |
| 37. கண்ணாடிக் குவளை | 1/2 | டசின் | |
| 38. வெள்ளிக் கிண்ணம் | 03 | தனி | ஒன்று ரூபா 100இற்குட்பட்ட |
| 39. கரண்டி | 04 | தனி | |
| 40. சட்டி | 02 | தனி | |
| 41. சட்டிமூடி | 02 | தனி | |
| 42. வாளி (இரும்பு, நெகிழம்) | 01 | தனி | ரூபா 350/-இற்குட்பட்டது |
| 43. சிறிய பானை (அலுமினியம்) | 02 | தனி | ஒன்று ரூபா 350/-இற்குட்பட்டது |
| 44. பெரிய பானை (அலுமினியம்) | 01 | தனி | ஒன்று ரூபா 500/-இற்குட்பட்டது |
| 45. பெரிய பானை (மண்) | 02 | தனி | |
| 46. கத்தரிக்கோல் | 01 | தனி | |
| 47. சுடுநீர்ப் போத்தல் | 01 | தனி | |
| 48. சுவர் மணிக்கூடு | 01 | தனி | ரூபா 1,000/-இற்குட்பட்டது |
| 49. மேசை மணிக்கூடு | 01 | தனி | ரூபா 500/-இற்குட்பட்டது |
| 50. கால்மிதி | 02 | தனி | |
| 51. நுளம்பு வலை | 01 | தனி | |
| 52. தெய்வப்படம் | 03 | தனி | ஒன்று ரூபா 300/-இற்குட்பட்டது |
| 53. நெகிழப்பாய் (பிளாஸ்ரிக் பாய்) | 03 | தனி | – |
| 54. கைப்பை (தோல் அல்லது நெகிழம்) | 02 | தனி | ரூபா 300/-இற்குட்பட்டவை |
| 55. கயிற்று வளையம் (நைலோன்) | 01 | தனி | ரூபா 500/-இற்குட்பட்டது |
| 56. குடை | 02 | தனி | |
| 57. முகம் பார்க்கும் கண்ணாடி சிறிது | 02 | தனி | ஒன்று ரூபா 400/-இற்குட்பட்டது |
| 58. வழலை (குளியல், சலவை) | 1/2 | டசின் | |
| 59. சம்பூப்பை | 01 | டசின் | |
| 60. மழைக்கவசம் | 01 | தனி | |
| 61. ஜக்கற் | 01 | தனி | ரூபா 400/-இற்குட்பட்டது |
| 62. காலணி (சான்றில்ஸ்) | 01 | சோடி | ரூபா 500/-இற்குட்பட்டது |
| 63. காலணி (செருப்பு) | 02 | சோடி | ரூபா 100/-இற்குட்பட்டவை |
| 64. காலணி (சப்பாத்து) | 01 | சோடி | ரூபா 1000/-இற்குட்பட்டது |
| 65. தேங்காய் நெய் | 05 | லீற்றர் | – |
| 66. மண்ணெய் | 05 | லீற்றர் | – |
| 67. கிருமிநாசினி (போத்தல் அல்லது கான்) | ரூபா 1000 இற்கு ட்பட்டது | | |
| 68. ஒரு குடும்பத்திற்கென எடுத்துவரப்படும் பலசரக்குப் பொருட்கள் | ரூபா 2000 இற்கு ட்பட்டது | | |
| 69. ஒரு குடும்பத்திற்கென எடுத்துவரப்படும் உணவுப் பொருட்கள் (சிற்றுண்டிகள்) | ரூபா 1000 இற்கு ட்பட்டது | | |
| 70. ஒருகுடும்பத்திற்குத் தேவையான புடைவை வகை | ரூபா 4000 இற்கு ட்பட்டது | | |
| 71. குழந்தைகளுக்கான வூல்த் தொப்பி | 03 | தனி | |
| 72. குழந்தைகளுக்கான ஊஞ்சல் | 01 | தனி | |
| 73. குழந்தைகளுக்கான கதிரை | 01 | தனி | |
| 74. குழந்தைகளுக்கான தள்ளுவண்டி | 01 | தனி | |
| 75. குழந்தைகளுக்கான உடை | 01 | தனி | |
| 76. குழந்தைகளுக்கான ஊட்டி (பீடிங்கப்) | 02 | தனி | |
| 77. குழந்தைப் பேணுகைத் தொகுதி (Baby Set) | 01 | தனித்தொகுதி | |
| 78. குழந்தைகளுக்கான உடை தாங்கி (கங்கர்) | 01 | தனி | |
| 79. குழந்தைகளுக்கான ரபர் சீற் | 02 | தனி | |
| 80. குழந்தைகளுக்கான மிதிவண்டி | 01 | தனி | |
| 81. குழந்தைகளுக்கான கொமட் | 01 | தனி | |
| 82. திருமண வீட்டிற்கான பொருட்கள் | | | |
| 01. பட்டுச்சேலை | 01 | தனி | ரூபா 13,000/-இற்குட்பட்டது |
| 02. பட்டுச்சேலை | 01 | தனி | ரூபா 4,000/-இற்குட்பட்டது |
| 03. பட்டுவேட்டி | 02 | தனி | ஒன்று ரூபா 3,000/-இற்குட்பட்டது |
| 04. காற்சட்டைத் துணி | 03 | தனி | ஒன்று ரூபா 500/-இற்குட்பட்டது |
| 05. சேட் | 03 | தனி | ஒன்று ரூபா 750/-இற்குட்பட்டது |
| 06. சாரம் | 03 | தனி | ஒன்று ரூபா 300/-இற்குட்பட்டது |
| 07. ரீசேட் | 02 | தனி | ஒன்று ரூபா 500/-இற்குட்பட்டது |
| 08. பஞ்சாபி | 02 | தனி | ஒன்று ரூபா 1,000/-இற்குட்பட்டது |
| 09. பாவாடை | 02 | தனி | ஒன்று ரூபா 300/-இற்குட்பட்டது |
| 10. சட்டை | 02 | தனி | ஒன்று ரூபா 300/-இற்குட்பட்டது |
| 11. உடைப்பெட்டி | 01 | தனி | ஒன்றுரூபா1,000/-இற்குட்பட்டது |
| 12. அழகூட்டும், மெருகூட்டும் பொருட்கள் | ரூபா 1000 இற்குஉட்பட்டவை | | |
| 83. இறுதிச் சடங்கிற்கென எடுத்து வரப்படும் பொருட்கள் | | | |
| 01. வெற்றிலை | 500 | தனி | |
| 02. பீடி (பண்டில்) | 02 | பண்டில் | |
| 03. சுருட்டு | 500 | தனி | |
| 04. வெடிப்பெட்டி | 02 | தனி | |
| 05. மெழுகுதிரி | ரூபா 200 இற்குஉட்பட்டது | | |
| 06. கற்பூரம் | ரூபா 200 இற்குஉட்பட்டது | | |
| 07. சாம்பிராணி | ரூபா 100 இற்குஉட்பட்டது | | |
| 08. உடை | ரூபா 1,300 இற்கு உட்பட்டது | | |
| 09. காலுறை | ரூபா 150 இற்குஉட்பட்டது | | |

(08 ஆம் பக்கம் பார்க்க)

## சிறுவிளம்பரம்

### திருத்துதலும் ஒட்டுதலும்

மூக்குக்கண்ணாடி ஒட்டுதல், சகல கெமரா வகைகளும் எலெக்ரோனிக் பிளாஸ்கன் திருத்துதல், சிறிய பிளாஸ்ரிக் பாட்ஸ் ஒட்டு தலுக்கு தொடர்பு:- சு.நாராயணசாமி இல. 301 கஸ்தூரியார் வீதி, (மேல் மாடி) கன்னாதிட்டிச் சந்திக்கருகில் மீண்டும் இயங்குகின்றது. (8005)


### அம்பன் மருந்தகம் இயங்கவில்லை

அம்பன் மத்திய மருந்தகம் படையினரால் கையளித்த பின்னரும் அது இயங்காதது குறித்து மக்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

மணற்காடு, குடத்தனை, பொற்பதி மற்றும் விளாங்காடு ஆகிய பகுதிகளைச் சேர்ந்த ஆயிரத்து 500ற்கும் மேற்பட்ட குடும்பத்தினர் இதனால் பாதிப்படைந்துள்ளனர்.

இது குறித்து மாகாணப் பிரதி சுகாதாரப் பணிப்பாளர் உரியநடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென அவர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

இதேவேளை, படையினரால் அண்மையில் கையளிக்கப்பட்ட அம்பன் கமநலசேவை நிலையத்தைத் திருத்துவதற்குப் படையினர் தடைவிதித்து வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (ந-43)

### ஆலயத்தில் அடிக்கடி திருட்டு

(பன்னாலை)

பன்னாலை வரத்தலக் கற்பக விநாயகர் ஆலயத்தில் உள்ள குதிரைவாகனம் கடந்த வியாழனன்று களவாடப்பட்டுள்ளது.

அதேசமயம்,இதற்கு முன்னர் இவ்வாலயத்தின் பிள்ளையார் விக்கிரகமும் களவாடப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (உ-32)

# அந்நிய நாடுகளின் இராணுவ உதவிகள் சமாதான முன்னெடுப்புக்கு சவால் விடுக்கும்

## தமிழ்க் கனேடியன் கருத்து

(ஒட்டாவா)

இந்தியாவோ அல்லது அமெரிக்காவோ இலங்கைக்கு கணிசமான இராணுவ உதவியை வழங்கினால், சமாதானம் மறக்கப்பட்டுவிடும். இந்த நிலையில், போரும் சமாதானமும் பற்றிய படிப்பினைகளைக் கற்றுக்கொண்ட சிங்கள அரசியல்வாதிகள் இவ்விரு நாடுகளின் இராணுவங்களுடன் இணைந்து தமிழர்களை எதிர்த்துப்போராட முயல்வார்கள். எனவே இந்த சவாலை எதிர்நோக்க தமிழர்கள் விடுதலைப்புலிகளின் பின்னால் அணி திரள்வது அவர்களின் கடமையாகும.

தமிழ்க் கனேடியன் இணையத்தளத்தில் நேற்று முன்தினம் வெளியிடப்பட்டுள்ள செய்திக் குறிப்பொன்று இத்தகைய எச்சரிக்கையை விடுத்துள்ளது.

அந்தச் செய்திக்குறிப்பில் மேலும் விரிவாக இது தொடர்பில் ஆராயப்பட்டுள்ளது.

அதன் விபரம் வருமாறு,

சிங்கள அரசியல்வாதிகள் தம்மை சமாதானத்தையும் நீதியையும் நேசிப்பவர்களாகவும் தமிழர்களை யுத்தவெறி பிடித்த பயங்கரவாதிகளாகவும் சித்திரிக்க முனைவது நீண்டகாலமாக அவர்களால் கடைப்பிடிக்கப்பட்டு வரும் ஒரு உபாயமாகும்.

முன்னாள் ஜனாதிபதி ஜே.ஆர். ஜெயவர்த்தன இந்த உபாயத்தை வெற்றிகரமாகப் பயன்படுத்தினார். ஆனால், தமிழ் அரசியல் தலைவர்களால் இதற்கு உரிய பதிலைக் கொடுக்கமுடியவில்லை. விடுதலைப் புலகள் ஒரு சக்தியாக உருவெடுத்து, ஜே.ஆர்.ஐ கணக்கில் எடுத்துக் கொள்ளும் வரையில் தமிழர்கள் ஜே.ஆரின் இனவாதத்திற்கு இரையாகவே விளங்கினார்கள். இது தமிழர்களை அடிபணியச் செய்யும் முயற்சி.

தமிழர்களை அடக்குவதற்கு ஜே.ஆர் பல்வேறு முறைகளைப் பயன்படுத்தினார். அவற்றில் ஒன்றுதான் இனக்கலவரங்கள், தமிழ் மக்களை அடிபணியச் செய்வதற்கான முயற்சிகள் சுதந்திரம் கிடைத்த அன்றே ஆரம்பித்துவிட்டன.

இந்த நிலையில் தான் சிங்கள அரசியல்வாதிகளுக்குச் சவால் விடுக்கும் பொறுப்பை தீவிரப்போக்குள்ள தமிழ் இளைஞர்கள் ஏற்றுக் கொண்டார்கள். தமிழர்களுக்கு எதிராகக் கட்டவிழ்த்து விடப்பட்ட யுத்தம் தமிழர்கள் மீது தாக்கத்தை ஏற்படுத்தியதைவிட நாட்டின் பொருளாதாரத்தின் முதுகெலும்பையே அது உடைத்தது.

இலங்கையின் பொருளாதாரத்தில் இருந்து தமிழர்கள் ஒதுக்கி வைக்கப்பட்டதால், பொருளாதார வீழச்சி அவர்களைப் பாதிக்கவில்லை.

தமிழர்களை அழிக்கும் நோக்கிலான யுத்தமானது சிங்களவர்களுக்குப் பெரும் கஷ்டங்களை உண்டுபண்ணியதால்,தென்பகுதி அரசியல்வாதிகள் சமாதானத்தை நாடுவதன் மூலம் தமிழர்களை அழிக்க முனைந்தனர்.

இது தொடர்பில் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க மேற்கொண்ட முதல் முயற்சியே தோல்விகண்டது. இதைத் தொடர்ந்து வந்த போர்களில் விடுதலைப்புலிகளுக்கு இழப்பை விட, ஆதாயமே அதிகமாகியது. எனவே, போரும் சமாதானமும் மீண்டும் சிங்கள அரசியல்வாதிகளின் கைகளைக் கடித்தன.

ரணில்விக்கிரமசிங்கவின் அரசாங்கம் தமிழ் மக்களுடன் சமாதானம்செய்து கொள்வதாகப் பிரகடனம் செய்ததன் பிரகாரம அனைவரின் கண்களில் முன்னாலும் காசோலைகள் நீட்டப்பட்டன. தமிழர்களே முறிவு நிலையை அடையும் வரையில் செல்வதற்கு அரசாங்கம் தயாராக இருக்கிறது. தமிழர்கள் தமது உரிமைகளுக்காகப் போராடவில்லை. தமது இலாபங்களுக்காகப் போராடுகின்றனர். பிரிவினைவாத யுத்தத்தின் பலாபலன்களை அவர்கள் பெற விருமபுகின்றனர் என்று உலகத்திற்கும் குறிப்பாக அமெரிக்காவுக்கும் நிரூபிக்க இவ் அரசாங்கம் முயற்சி செய்கின்றது.

சமீபகால சமாதான முன் முயற்சிகள் செல்லும் விதமும், ரணில் விக்கிரமசிங்க இதற்கு இடமளித்த விதமும் தமிழர்களை நசுக்குவதில் சிங்களவர்கள் வெற்றி பெறப் போகின்றார்கள் என்றே எல்லோரையும் எண்ணச் செய்தன ஆனால, விடுதலைப்புலிகள் வேறு விதமாகச் செயல்பட்டனர்.

விடுதலைப்புலிகள் யுத்தத்தில் எத்தகைய வீறுடன் கலந்து கொண்டார்களோ, அது போலவே சமாதான முயற்சியிலும் நிலைப்பாட்டை எடுத்தனர்.சமாதானம் என்பது சிங்களத்தலைவர்களுக்குக் கையாள முடியாத விஷயமாக வருகின்றது. இதனால்தான், பிரதமரும், ஜனாதிபதியும் மாறி மாறிப் பந்தை வீசுகின்றார்கள்.

தோல்வி ஏற்படக்கூடிய போக்குத் தென்படும் போதெல்லாம் தமிழர்களே அதற்கு விலை கொடுக்க வேண்டியுள்ளது. சுதந்திரம் கிடைத்த காலம் தொடக்கம் சிங்கள அரசியல்வாதிகளின் மனோபாவம் மாறியதே இல்லை. என்பதே இதற்குக் காரணமாகும்.

அவர்கள் இன்னமும் தமிழர்களுக்கு நியாயமான அந்தஸ்த்தை வழங்க விரும்பவில்லை. சமாதானமும் யுத்தமும் தமிழர்களை அழித்தொழிப்பதற்கான கருவிகளே. யுத்தத்தில் வெற்றி பெறும் வேளையில், பொதுஜன ஐக்கிய முன்னணியோ, ஐக்கிய தேசியக் கட்சியோ சமாதானத்தை முன்வைக்கவில்லை. ஆனால், விடுதலைப் புலிகள் சமாதானத்தை முன்வைத்தார்கள். (உ)

# அத்துருகிரிய சம்பவத்துக்கு உடன் நடவடிக்கை எடுக்குக!

### ஜனாதிபதியிடம் சிஹல உறுமய கோரிக்கை

(கொழும்பு)

அத்துருகிரிய இராணுவ புலனாய்வுத் துறையினரின் வீடு சோதனையிடப்பட்டமை பற்றி வெளிவந்த அறிக்கை தொடர்பாகக் கவனம் செலுத்துமாறும், அதற்குப் பொறுப்பானவர்கள் மீது உடனடி நடவடிக்கை எடுக்குமாறும், சிஹல உறுமய ஜனாதிபதியிடம் கோரியுள்ளது.

இது தொடர்பாக பேசிய கட்சியின் தலைவர் திலக் கருணாரட்ண இதற்காக குழு ஒன்றை நியமிப்பதோ அல்லது அவ்வறிக்கை தொடர்பாக ஆராய்வதோ பயனற்ற செயல். மாறாக உடனயாக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். இவ்வறிக்கையை புறக்கணிக்கக் கூடாது. நாட்டின் பாதுகாப்பைக் காட்டிக் கொடுத்தமைக்காக சந்தேக நபர்கள் தண்டிக்கப்பட வேண்டும். நாம் இதைக் கூறுவது முதல் தடவை அல்ல என்றார்.

இதேவேளை, அத்துருகிரியவிலுள்ள இராணுவப் புலனாய்வு வீடு கடந்த வருடம் உதவிப்பொலிஸ் அத்தியட்சகர் உடுகம் பொலவால் சோதனையிடப்பட்ட விடயம் அரசியல் சட்டத்தை மீறிச் செய்யப்பட்டுள்ளதாக ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழு குற்றஞ் சாட்டியுள்ளது.

அத்துடன், இச்சட்டவிரோத நடவடிக்கைக்கு பிரதமரும் ஏனைய சகாக்களுமே பொறுப்பேற்க வேண்டும் என விசாரணைக் குழுவின் ஆணையாளர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, பிரதமர் இதில் நேரடியாகத் தலையிடாவிடினும் அவர் இந்நடவடிக்கையை தடுத்திருக்க வேண் டும்' என்றும் திலக்கருணாரட்ண மேலும் தெரிவித்துள்ளார். (இ-6)

# கடற்படை முகமாருகே பயிர்ச் செய்கைக்குத் தடை

(கிளிநொச்சி)

திருகோணமலை கும்புறுப்பிட்டி கிராமத்தில் அமைந்துள்ள கடற்படை முகாமிற்கு அண்மையில் உள்ள விவசாய நிலங்களில் பயிர் செய்வதற்குத் தடைவிதிக்கப்பட்டுள்ளது.

மேற்படி பகுதியில் உள்ள விவசாய நிலங்களில் பெருமளவு மிதிவெடிகள் புதைக்கப்பட்டிருப்பதாக மனித நேய கண்ணிவெடி அகற்றும் பிரிவு தெரிவித்துள்ளதுடன், அங்குள்ள மிதிவெடிகளை முற்றாக அகற்றும் வரை எவரும் விவசாயத்தில் ஈடுபடவேண்டாம் எனவும் தெரிவித்துள்ளது. (உ-64 10)

# கண்ணிவெடி அகற்றும் பணி ஒருமாத காலத்துள் பூர்த்தி

(கொழும்பு)

ஓமந்தையில் இருந்து புளியங்குளம் வரையிலான இராணுவக் கட்டுப்பாடற்ற பகுதிகளில் உள்ள கண்ணிவெடிகளை அகற்றும் பணிகள் சுமார் ஒரு மாதகாலத்திற்குள் பூர்த்தியாகும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மனிதநேய கண்ணிவெடிகளை அகற்றும் அமைப்பின் பிரிவைச் சேர்ந்த சுமார் 40 பணியாளர்கள் இக் கண்ணிவெடி அகற்றும் பணியினை மேற்கொண்டுள்ளனர்.

ஓமந்தையில் இருந்து புளியங்குளம் வரையிலான சுமார் 9 கிலோ மீற்றர் தூரத்திற்கு மின்னிணைப்பு வழங்கும் நோக்குடனேயே இக் கண்ணிவெடி அகற்றும் பணி ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இப்பிரதேசத்தில் உள்ள கண்ணிவெடிகள் அகற்றப்பட்ட பின்னர் உடனடியாக மின்னிணைப்பு வழங்கப்படும் என்றும், இம் மின்னிணைப்புக்காக ஐரோப்பிய ஒன்றியம் சுமார் 22 மில்லியன் ரூபாவை வழங்கியிருப்பதாகவும் வவுனியா அரச அதிபர் கே. கணேஷ் தெரிவித்துள்ளார். (ம)

# அரச ஊடகங்களில் விளம்பரம் செய்வதற்குப் பிரதமர் தடை

(கொழும்பு)

மூன்று அமைச்சுக்கள் ஜனாதிபதியினால் பொறுப்பேற்கப்பட்டதைத தொடர்ந்து ஏற்பட்டுள்ள இழுபறி நிலை தீர்க்கப்படுவதற்கு இன்னும் வாய்ப்புக்கள் கண்டறியப்படாத நிலையில் அரச ஊடகங்களில் விளம்பரங்களை பிரசுரிப்பதை நிறுத்துமாறு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அனைத்து அமைச்சுக்களுக்கும், அரச நிறுவனங்களுக்கும் பணிப்புரை விடுத்துள்ளார்.

அரச ஊடகங்களில் அரச நிறுவனங்கள் எதுவும் விளம்பரங்களைப் பிரசுரிக்கக் கூடாது என்று அமைச்சரவைக் கூட்டத்தில் அவர் அறிவித்தார். அரச ஊடகங்கள் இப்பொழுது ஒரு கட்சி சார்பான செய்திகளை வெளியிடத் தொடங்கியுள்ளதாக நுகர்வோர் விவகார அமைச்சர் ரவி கருணாநாயக்க முறைப்பாடு செய்ததைத் தொடர்ந்தே பிரதமர் இவ்வாறு அறிவித்தார். (ந)

# மாலைதீவு சிறைகளில் இருந்த 19 இலங்கையர்களுக்கு விடுதலை

(கொழும்பு)

மாலைதீவு சிறைச்சாலைகளில் இருந்த 19 இலங்கை மீனவர்கள் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

ஆனால், இவர்கள் பயணம் செய்த 4 படகுகளும் மாலுமிகளும் மாலைதீவில் விசாரணைகளுக்காகத் தடுத்து வைக்கப்பட்டுளளனர்.

இலங்கை மீனவர்களை விடுதலை செய்யுமாறு மாலைதீவு அதிபர் மம்மூன் அப்துல் கையூம் உத்தரவிட்டதன் பேரிலேயே இவர்கள் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

இம்மாதத் தொடக்கத்தில் 34 வெளிநாட்டு மீனவர்களையும் மாலைதீவு விடுதலை செய்தது. இவர்களில் 16 இந்தியர்கள் உட்பட பிலிப்பைன்ஸ்,வங்கதேசம் போன்ற நாட்டவர்களும் அடங்குவர். (தி)

# சுஸந்த பெர்னாண்டோவுக்கு பிணை அனுமதி மறுப்பு

(கொழும்பு)

வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தின் தலைவர் சுஸந்த பெர்னாண்டோவிற்கு பிணை வழங்குவதற்கு கொழும்பு மஜிஸ்ரேட் அனுமதி மறுத்துள்ளது.

அத்துடன் பணியகத்தின் தலைவரை எதிர்வரும் 26ஆம் திகதி வரை தொடர்ந்து விளக்கமறியலில் வைக்கும்படியும மஜிஸ்ரேட் உத்தரவிட்டுள்ளது.

இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழு அதிகாரிகளினால் கடந்த வெள்ளிக்கிழமை கைதுசெய்யப்பட்டு நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டதைத் தொடர்ந்து அவர் விளக்க மறியலில் வைக்கப்பட்டார்.

மஜிஸ்ரேட் நீதிமன்றத்தில் நேற்று மீண்டும் ஆஜர் செய்யப்பட்டபோது, அவர் சார்பில் ஆஜரான சட்டத்தரணி சந்தேகநபர் நோய்வாய்ப்பட்டுள்ளதைக் கருத்தில்கொண்டு பிணைவழங்குமாறு மனுசெய்தார்.

இதற்கு பதிலளித்த மஜிஸ்ரேட், இலங்கையில் உள்ள பிரபல்யமான கொழும்பு மருத்துவமனையில் சிகிச்சையளித்ததாக சுட்டிக்காட்டி பிணை அனுமதி வழங்கமறுத்துள்ளார்.(தி)


## எனக்குப் பள்ளிக்கூடம் போக ஆசை

மீனாவிற்குப் பள்ளிக்கூடம் போக ஆசை. அங்கே அவள் பல புதிய விடயங்களைக்கற்கின்றாள். அவளின் ஆசிரியை பாடங்களைச் சுவையாகவும் கவர்ச்சியாகவும் சொல்லிக்கொடுக்கின்றார். மீனாவின் ஆசிரியை பயிற்சி பெறுவதற்காக சில வாரங்கள் போனபோது அந்த நிலைமை மாறுகின்றது. புதிய ஆசிரியை கற்பிக்கும் முறை வித்தியாசமானது. அவர் பாடத்தை வாசிப்பார். பிள்ளைகள் அதை திருப்பிச் சொல்ல வேண்டும். இதனால் பிள்ளைகள் உற்சாகம் குன்றுகின்றனர். பாடம் மிக மோசமாய் இருப்பதாக உணர்கின்றனர்.

ஒரு நாள் ஆசிரியை நெம்புகோல் பற்றிய பாடத்தை ஆரம்பிக்கின்றார். அவர் சொல்வது ஒருவருக்கும் புரியவில்லை. மீனா ஒரு கேள்வி கேட்கிறாள். ஆசிரியைக்கு கோபம் வந்து விட்டது. அவளை வகுப்புக்கு வெளியே அனுப்புகின்றார்.

மனமுடைந்த மீனா தனது புதிய ஆசிரியை பற்றி தன் சிநேகிதி தாராவிற்கு கூறுகின்றாள். நெம்புகோல் பற்றிய தத்துவம் தனக்குப்புரியவில்லை என சொல்லுகிறாள்.தாராவிடம் அதற்கு மிக இலகுவான விடை உண்டு. நெம்புகோல்களை எவ்வாறு உபயோகிப்பது என செய்து காட்டுகின்றாள்

மிகுதி நாளைய வலம்புரியில்



உங்கள் தொடர்புகளுக்கான எங்கள் முகவரி:-
மாவட்ட சிறுவர் பாதுகாப்புக் குழு
அறை எண்-30,
யாழ். போதனா வைத்தியசாலை,
யாழ்ப்பாணம்.

unicef

(C/6946)

## இன்று ஒரு தகவல்

# மருமகள்

இப்போதெல்லாம் நமது ஊரில் மாமியார்-மருமகள் ஒருவரையொருவர் நன்கு புரிந்துகொண்டு நல்ல விதமாகத்தான் இருக்கின்றனர். அதனால் நான் இப்போது கூறப்போகும் கதையைக் கேட்டுவிட்டு இப்போது யார் அவ்வளவு மோசமாக நடக்கின்றார்கள்? என்று சண்டைக்கு வராதீர்கள். இன்னொரு உண்மையையும் கூறி விடுகிறேன் எனது பாதுகாப்புக்காக.

இந்தக்கதையை நமக்கு எழுதி அனுப்பியிருப்பதே கொஞ்சநாளில் மருமகளாகவும் அதன் பின் சில நாட்களில் மாமியாராகவும் ஆகப்போகின்ற ஒரு நேயர் தான். சரி இனி கதைக்கு வருவோம்.

ஒரு சிறு குழப்பம். அந்த வீட்டில் மாமியார் ஆட்சி. அவர் வைத்தது தான் சட்டம். மகனோஅம்மாகூறுவதையும் கேட்டுக்கொள்வான். மனைவி கூறுவதையும் கேடடுக்கொள்வான். நமக்கு ஏன் வம்பு என்கின்ற ரகம்.

மருமகள் மீது குறை கண்டுபிடிப்பதிலேயே அந்த மாமியாருக்கு ஒரு மகிழ்ச்சி.சின்னச்சின்ன விஷயங்களுக்கெல்லாம் குறை சொல்லிக்கொண்டிருப்பார். பொதுவாக எல்லோரும் எப்படி என்றால் ஏதாவது ஒரு காரணத்திற்காக சண்டை செய்வார்கள். ஆனால் இந்த அம்மா ஏதாவது ஒரு சண்டை செய்வதற்காக காரணத்தைத் தேடிக்கொண்டிருப்பார். அப்படி ஒரு மனசு. அந்த மருமகளோ பாவம் பயந்து பயந்து ஒவ்வொரு காரியமும் செய்வார்.

இப்படியே பல வருடங்கள் ஓடிப்போய்விட்டது.அந்த மாமியாருக்கும் வயதாகிவிட்டது. இருந்தாலும் அந்தப் பழைய சுபாவம் மட்டும் மாறவில்லை. திடீரென்று ஒரு நாள் பக்கவாதம் வந்து அவரது ஒரு பக்கக் கை கால் இழுத்துக்கொண்டது. வாய் சுத்தமாகப் பேச முடியாது போய்விட்டது. சத்தம் மட்டும் வரும்.

ஒரு பக்கத்துக் கை காலை அசைக்க முடியும். பேசுவது கூட சைகையால் தான். இப்படியான நிலைமையிலும் கூட அந்த மருமகள் தண்ணீரோ பாலோ கொடுத்தால் அதை வேண்டுமென்றே தட்டிவிட்டு வம்பு வளர்ப்பது. அதன் பின் மருமகள் தரையைச் சுத்தப் படுத்தும் போது அதனைப் பார்த்து ரசிப்பது. இருந்தாலும் அந்தப பெண் இவற்றையெல்லாம் பெரிது படுத்தாமல் பொறுமையாக இருந்தாள்.

ஒரு நாள் வீட்டில் வைத்திருந்த பாலை பூனை குடித்துவிட்டு ஓடி விட்டது. வயதான காலத்தில் இந்த அம்மா பால் இல்லாமல் கஷ்டப்படுவாரே என்று நினைத்து பக்கத்து வீட்டில் போய்க்கொஞ்சம் பால் வாங்கிக்கொண்டு வந்து காய்ச்சி மாமியார் முன்பாக கொண்டு வந்து வைததாா.

வழக்கம் போல் அந்த மாமியார் பாலைத்தட்டி விட்டார். இதை மருமகள் பார்த்தார். இவ்வளவு நாளும பொறுமையாக இருந்த அந்த மருமகளுக்கு இன்று அசாத்தியக் கோபம் வந்து விட்டது. கதவுக்குப் பக்கத்தில் வைத்திருந்த உலக்கையை எடுத்து மாமியாரின் தலையில் போட அது குறி தவறி கழுத்தில் பட மாமியார் ஆ...ஊவென்று கத்தினார்.இந்தப் பெண் ஒன்றும் அலட்டிக்கொள்ளவில்லை. உலக்கையை எடுத்து மீண்டும் கதவின் பக்கம் வைத்துவிட்டார்.

இருந்தாலும் மனதுக்குள் ஒரு பயம். கணவன் வந்ததும் என்ன விஷயம் என்று கேட்டால் எப்படிச் சமாளிப்பது? அன்று நீண்டநேரம் கழித்து வீடு வந்தான் கணவன். உடனே அந்த அம்மா புகார் செய்ய ஆரம்பித்துவிட்டார். பேச்சு வராதே அதனால் ஒரு பக்கத்துக் கையால் சைகைகாட்டினார். கதவுக்குப் பக்கத்தில் இருந்த உலக்கைப் பக்கமாக கையை நீட்டிக் காட்டி அந்தக் கையை தனது கழுத்தின் பின் பக்கமாக சுற்றிக் காட்டி நாக்கை வெளியே நீட்டி நடந்த விஷயத்தை விபரிக்க முயன்றார்.

இவனுக்கு ஒன்றும் புரியவில்லை. ''என்ன சொல்கிறார் அம்மா?''என்று மனைவியிடம் கேட்டான். அதற்கு அந்த மருமகள் மிகவும் புத்திசாலித்தனமாக ''என்ன உங்கள் அம்மா கூறுவது உங்களுக்கு இன்னும் புரியவில்லையா? அவர் உங்களைப்பார்த்து ஏன் இன்னும் உலக்கை மாதிரி நிற்கிறாய்? சாகப்போகும் எனக்கு சங்கிலி எதற்கு. என்கழுத்தில் கிடக்கும் இந்தச் சங்கிலியைக்கழற்றி என் மருமகள் கழுத்தில் போடு'' என்று கூறுகிறார் என்றாள்.

''ஓ... அப்படியா விஷயம்''என்று கூறி அம்மாவின் கழுத்தில் இருந்த சங்கிலியை எடுத்து மனைவியின் கழுத்தில் போட்டுவிட்டு ''அம்மா... உன் விருப்பப் படியே போட்டாகிவிட்டது. இனியாவது நிம்மதியாக உறங்கு'' என்று கூறி உள்ளே போய்விட்டான்.

பார்த்தீர்களா கதையை! அதனால் மாமியார்களே சைகை காட்டுவதென்றால் கூட இனிமேல் கவனமாக இருங்கள்.

*தென்கச்சி கோ. சுவாமிநாதன்*

# விளையாட்டில் நாம் கொள்ளும் நாட்டம் சமூகச் சீரழிவுகளை தூரவிரட்டும்

## தமிழீழ விளையாட்டுத்துறைப் பொறுப்பாளர் பாப்பா

(யாழ்ப்பாணம்)

எமதுதமிழ் இளைஞர்களை, விளையாட்டு மைதானங்களிற்கு ஆர்வத்துடன் வரவழைப்பதன் மூலமாக சமூகச்சீரழிவுகளில் இருந்து மீள்வதுடன், ஆரோக்கியமான சமுதாயத்தையும் கட்டியெழுப்ப முடியும் என தமிழீழ விளையாட்டுத்துறைப் பொறுப்பாளர் பாப்பா தெரிவித்துள்ளார்.

எல்லைப்படை மாவீரர் ஞாபகார்த்தமாக நேற்று முன்தினம் சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி மைதானத்தில் மின்னொளியில் நடத்தப்பட்ட உதைபந்தாட்டப் போட்டியின் பரிசளிப்பு விழாவில் பிரதமவிருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே பாப்பா இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு தொடர்ந்தும் உரையாற்றுகையில்,

எமது யாழ்.மாவட்ட உதைபந்தாட்ட வீரர்களுக்கும் இரசிகர்களுக்கும் இருந்து வந்த நீண்டநாள் அவா இநதப்பாரிய போட்டி மூலமாகத் தர்க்கப்பட்டிருப்பதுடன், மிக அமைதியாகவும் எல்லோரும் மெச்சும்படியாகவும் இப்போட்டிகள் நடைபெற்று முடிவடைந்திருப்பது எல்லைப் படை மாவீரர் தியாகம் இங்கு மிகப் புனிதமானதாக மதிக்கப்பட்டுள்ளதைக் காட்டுகிறது.

மேலும் தொடர்ச்சியாக நாம் இவ்வாறான ஒற்றுமையுணர்வுடன் செயற்படவேண்டுமென்பதுடன், தமிழர் தாயகத்தில் பலமான உதைபந்தாட்ட அணிகளை உருவாக்க வேண்டும். அதன்மூலம் எமது இந்தச் சிறிய தேசத்தின் பெருமையை உலகம் முழுமையும் பரவச்செய்ய வேண்டும்.

இலங்கையில் சிறந்த மெய்வல்லுநர் வீர,வீராங்கணைகள் மற்றும் சிறந்த துடுப்பாட்ட அணியிருந்தும் அதில் எமது தமிழ் வீர,வீராங்கணைகள் எவருக்கும் வாய்ப்பளிக்கப்படவில்லை. தேசிய மட்டத்திலும சர்வதேச மட்டத்திலும் வெற்றிகளை நாம் பெறுவதன் மூலமே அவர்களுக்கு நிகராக எம்மையும் வெளிக்காட்டமுடியும் என்ற நம்பிக்கை ஒவ்வொருவருக்கும் இருக்க வேண்டும்.

இவ்விழாவில் பங்கேற்ற ஆசிய மட்டமெய்வல்லுநர் போட்டியின் உயரம்பாய்தல் நிகழ்ச்சியில சாதனை ஏற்படுத்திய முன்னாள் வீரர் எதிர்வீரசிங்கம் உரையாற்றுகையில்,

இன்றைய நாள் சிறப்பான ஒரு நான் நாள். இப்போட்டியில் இரசிகர்களின் வரவையும் செயற்பாடுகளையும் பார்க்கும்போது ஓர் உலகத் தரமான போட்டியைப் போலவே இதை நான் உணர்கின்றேன்.

இப்போட்டிகளில் பங்கேற்ற அணிகளைப் பயிற்றவித்தவர்கள் வீர்களை சிறப்பாக வழிநடத்தியிருப்பதை உணர முடிகின்றது. விளையாட்டில் எமது வீரர்கள் உச்சநிலையை அடைய வேண்டும் என்பதே எனது நீண்டநாள் விருப்பம் என்றார்.

(உ-68)

# பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் கூற்றை ஜனாதிபதி செயலகம் மறுப்பு

(கொழும்பு)

பாதுகாப்பு அமைச்சு ஜனாதிபதியின் கீழ் இருக்க வேண்டுமென எந்தவொரு அரசியல் யாப்பிலும் குறிப்பிடப்படவில்லை என பிரதமர் ரணில்விக்கிரமசிங்க தெரிவித்துள்ளதை ஜனாதிபதி செயலகம் மறுத்துள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சியின் 49வது வருடாந்த தேசிய மாநாட்டிலேயே பிரதமர் இதனைத் தெரிவித்திருந்தார்.

இது தொடர்பாக ஜனாதிபதி செயலகம் விளக்கமளிக்கையில், அரசியல் யாப்பின் முதலாவது பந்தியில் நாட்டின் பாதுகாப்பு ஜனாதிபதியின் கீழ் இருக்கவேண்டும் எனத்தெட்டத் தெளிவாக குறிப்பிப்பட்டுள்ளது.

அரசியல்யாப்பின்7 வது பந்தி தரை, விமானம் மற்றும் கடற் படைகளின் பிரதம தளபதியாக வும், அரசின் நிறைவேறறு அதிகாரம் கொணடவராக வும், தலைவராக வும் ஜனாதிபதி இருக்கின்றார் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

இது தொடர்பாக அரசியல் ஆய்வாளர் எச்.எல்.டி. மகிந்தபால கருத்துத் தெரிவிக்கையில், பிரதமர் ரணில் விக்கிரமசிங்க பாதுகாப்பு அமைச்சை சமாதானத்திற்காகவோ அன்றி நாட்டின் பாதுகாப்பிற்காகவோ திருப்பிக் கோரவில்லை.

மாறாக அவர் தனது பாதுகாப்பிற்கும் தனது அரசாங்கத்தின் பாதுகாப்பிற்குமாகவே அதனைத் திருப்பிக்கோரி வருகிறார்.

அத்துடன் ஜனாதிபதிக்கு குறைந்த அதிகாரங்கள் வழங்கப்பட வேண்டும் என்பதையே அவர் விரும்புகின்றார்.

அரசியல்வாதிகள் நாட்டின் அரசியல் அமைப்பை தமது திட்டங்களை நிறைவேற்றிக் கொள்வதற்காக கையில் எடுத்துக் கொள்ளக் கூடாது.

அரசியல் அமைப்பு மீது பிரதமர் விடுத்து வரும் சாவல்கள் நாட்டில் பாரதூரமான விளைவுகளை ஏற்படுத்தும் என அவா மேலும்தெரிவித்துள்ளார்.

(தி-60)

## இராசி பலன்

16.12. 2003

(மார்கழி~01,செவ்வாய்)

சப்தமி மு.ப. 7.31 வரை

பூரம் பி.ப. 12.57 வரை

இராகுகாலம் 3.22-4.52

சுபநேரம் 10.52-12.22

சித்தாமிர்தம்

**மேடம்**
வியாபார நன்மை, பணத் தட்டுப்பாடு தாழ்ந்த சுபாவம், காரிய இடையுறு

**இடபம்**
புத்தி சஞ்சலம், தனவிரயம், முயற்சி தாமதம், உஷ்ணரோகம்.

**மிதுனம்**
மனோ தைரியம், நற்கீர்த்தி, காரிய சித்தி, மாதர் நட்பு.

**கடகம்**
தனவிரயம், போசனசுகக்குறைவு, அதிக பிரயாசை, வாக்கு மேன்மை.

**சிங்கம்**
பெரியோர் உதவி, போசன சுகம், எடுத்த கருமங்கள் கைகூடும்,புதிய செய்தி

**கன்னி**
புதிய திருப்பம், அமைதிக் குறைவு, திடீர் நன்மை, தனவிரயம்.

**துலாம்**
குடும்ப நலம், பெருமை அடைதல், எடுத்த காரியம் கைகூடும், தனவிரயம்.

**விருச்சிகம்**
நிலைமாற்றம், நன்கொடை, காரிய சித்தி, நல்ல நிகழ்வு.

**தனுசு**
புதிய திட்டமிடல், எதிர்பாராத செலவு, காரிய தாமதம், பிரயாணம்.

**மகரம்**
மனக்கவலை, காரிய தடங்கல், பணத் தட்டுப்பாடு, ரோக நிலை.

**கும்பம்**
கௌரவமான நிலை, காரிய அனுகூலம் போசன சுகம், பெரியோர் சந்திப்பு.

**மீனம்**
தேக நலன், தொழில் முயற்சி, மனமகிழ்ச்சி விருந்துபசாரம்.

(பழையநேரப்படி கணிப்பிடப்பட்டது)

- வளவன்.

# மீன்பிடி பயிற்சிப் பட்டறை நேற்றுக் கொழும்பில் ஆரம்பம்

(கொழும்பு)

மீன்பிடித் துறைக்கான பிராந்தியப் பயிற்சிப்பட்டறை நேற்றுக் கொழும்பில் ஆரம்பமாகியது.

சிறிய மற்றும் நடுத்தரத் தொழிலாளர்கள் ஆழ்கடலில் பாரிய மீன்களைப் பிடிப்பதற்கான உத்திமுறைகள் குறித்து இப்பயிற்சிப்பட்டறையின் போது விளக்கப்படும்.

நேற்று ஆரம்பமான இப்பயிற்சிப் பட்டறையில் இந்தியா, பாகிஸ்தான், ஈரான், மாலைதீவு ஆகிய நாடுகளின் பிரதிநிதிகளும் கலந்து கொண்டனர்.

இப்பயிற்சிப் பட்டறையை ஐக்கிய நாடுகள் ஸ்தாபனத்தின் உணவு மற்றும் விவசாய அமைப்பு ஏற்பாடு செய்திருந்தது. (தி-61)

# வலது குறைந்தோர்க்கு பயிற்சிப் பாசறைகள்

(கொழும்பு)

சமூகத்தில் உள்ள வலது குறைந்தோரை முன்னேற்றுவதற்காக நாடளாவிய ரீதியில் அவர்களுக்கு பயிற்சிப் பாசறைகள் நடத்தப்படவுள்ளதாக சுனேத்திரா மன்றத்தின் தலைவியும் ஜனாதிபதியின் சகோதரியுமான சுனேத்திரா பண்டாரநாயக்க தெரிவித்துள்ளார்.

தங்காலையில் நேற்று முன்தினம் மேற்படி மன்றத்தினால் நடாத்தப்பட்ட வலது குறைந்தோர்களுக்கான பயிற்சிப்பாசறையில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே இதனைத் தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்தும் உரையாற்றுகையில்,

சமூகத்தால் ஒதுக்கப்பட்ட ஒருவரை சமூகம் மீண்டும் ஏற்றுக்கொள்ளக் கூடியவராக மாற்றுவதே இநதப் பயிறசிப் பாசறையின் நோக்கமாகும்.

அத்துடன்,அவர்களின் விருப்பங்களை அறிந்து அவர்களுக்கு பல்வேறு வகையில் உதவிகளை வழங்க, அவர்களிடம் உள்ள காழ்புணர்வை களைந்தெறிய நடவடிக்கை எடுக்கவுள்ளேன் என்றார்.

(உ-61,10)

# நெற் செய்கையால் நட்டம் வெங்காயம் பயிரிடுவதில் நாட்டம்

(பன்னாலை)

பன்னாலைப் பகுதி விவசாயிகள் நெற் செய்கையில் ஆர்வம்குன்றி இருக்கும் அதேவேளை, வெங்காயச செய்கையில் அதிகம் ஈடுபாடுகாட்டி வருவதனை அவதானிக்க முடிகின்றது.

நெற் செய்கைக்காக ஏற்படும் செலவுகள் அதிகம் என்பதையும் அதனைச சந்தைப்படுத்துவதில் காணப்படும் இடர்பாடுகளையும் கருத்தில் கொண்டே விவசாயிகள் நெற்செய்கையை இயன்ற அளவுக்குத் தவிர்த்து வருகின்றதாகக் கூறபபடுகின்றது.

இதேவேளை, வெங்காயச் செய்கையில் அதிக நாட்டமுடன் இப்பகுதி விவசாயகள் ஈடுபட்டு வருவதனைக் காணக் கூடியதாகவுள்ளது. (உ-32)


# ஈராக்கில் பேரழிவு ஆயுதங்கள் என்பது அமெரிக்காவின் கனவு

## ஆரம்பக்கட்ட விசாரணைகளில் சதாம் தெரிவிப்பு

(வாஷிங்டன்)

**பேரழிவுகளை ஏற்படுத்தும் ஆயுதங்கள் ஈராக்கில் இருப்பதாக அமெரிக்கா கூறிவருவதை சதாம் ஹுசைன் முற்றாக மறுத்துள்ளார்.**

அமெரிக்கப் படையினரால் கடந்த சனிக்கிழமை இரவு கைது



செய்யப்பட்ட ஈராக்கின் முன்னாள் அதிபர் சதாம் ஹுசைனிடம் மேற்கொள்ளப்பட்ட ஆரம்பக்கட்ட விசாரணைகளின் போதே அவர் இவ்வாறு மறுப்புத் தெரிவித்துள்ளார் என அமெரிக்கப் புலனாய்வுப்பிரிவின் அதிகாரி ஒருவரை மேற்கோள் காட்டி ரைம்ஸ் நாளிதழ் செய்தி வெளியிட்டுள்ளது.

ஈராக்கின் சதாம் அரசிடம் பேரழிவு ஆயுதங்கள் இருந்தனவா என்று புலனாய்வுப் பிரிவினரால் கேட்கப்பட்ட கேள்விக்குப் பதிலளிக்கையில், ஈராக்கில் பேரழிவுகளை ஏற்படுத்தும் ஆயுதங்கள் எவையும் இல்லை எனவும், தமது நாட்டின் மீது போர் தொடுப்பதற்காகவே அமெரிக்கா இவ்வாறு கனவு கண்டுள்ளதெனவும் அவர் கூறியுள்ளார்.

அவ்வாறாயின், ஐக்கிய நாடுகள் சபையின் ஆயுதப் பரிசோதகர்களை ஈராக்கிற்குள் அனுமதிக்க மறுத்தது ஏன் என புலனாய்வுப் பிரிவினர் அடுத்துக் கேட்ட கேள்விக்கு அவர் பதிலளிக்கையில், ஈராக்கின் அரச மாளிகைக்குள்ளும், இரகசிய நிலையங்களுக்குள்ளும் ஆயுத பரிசோதகர்களை நுழைய விடுவதைத் தான் விரும்பவில்லை எனத் தெரிவித்தார்.

எனினும், புலனாய்வுப் பிரிவினரின் எந்தவொரு கேள்விகளுக்கும் சதாம் நேரடியாகப் ,பதிலளிக்கவில்லையெனவும் அவர் தமது ஆரம்பக்கட்ட விசாரணைகளுக்கு பூரண ஒத்துழைப்பு வழங்கவில்லை எனவும் பெயர் குறிப்பிட விரும்பாத அப்புலனாய்வுப் பிரிவு அதிகாரி ஒருவர் தெரிவித்ததாக ரைம்ஸ் நாளிதழில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதேவேளை, ஈராக்கின் திக்ரித் நகரில் இருந்து 15 கிலோமீற்றர் தொலைவில் உள்ள பாதாள அறை ஒன்றில் வைத்துக் கைது செய்யப்பட்ட சதாம் அப்போது தன்னைச் சுடவேண்டாம் எனவும் ஈராக் அமெரிக்கக் கூட்டுப்படையினரால் தாக்கப்பட்டதையடுத்து தாம் உளரீதியாகப் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் கூறியுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

(து-2)



ஈராக்கில் சதாம் ஹுசைனின் ஆட்சியின் போது அவர் தனது குடும்பத்தினருடன் எடுத்துக் கொண்ட புகைப்படம். இப் புகைப்படம் ஈராக்கின் தனியார் ஆவணக் காப்பகத்தில் இருந்து அமெரிக்கப் படையினரால் கைப்பற்றப்பட்டது.

# அயோத்தியில் இராமர் கோயில்கட்ட அனுமதிப்பவரே அடுத்த பிரதமர்

## ஹிந்துப் பரிசத்தின் செயலர் சவால்

(புதுடில்லி)

அயோத்தியில் இராமர் கோயில் கட்ட எவர் ஆதரவளிக்கின்றாரோ அவர் தான் அடுத்த பிரதமராக வர முடியுமென விஸ்வஹிந்துப் பரிசத் வலியுறுத்தியுள்ளது.

கர்நாடக மாநிலத்தில் நடைபெற்ற ஹிந்து புரிந்துணர்வு மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றிய விஸ்வஹிந்துப் பரிசத்தின் பொதுச் செயலர் பிரவீன் ரொகாடியா இவ்வாறு வலியுறுத்தியுள்ளார்.

அங்கு தொடர்ந்து உரையாற்றிய அவர்,

மதச் சார்பற்ற கட்சிகள் எனக் கூறிக கொள்பவர்கள் சிறுபான்மை இனத்தவர்களை வெறும் வாக்களிக்கும் வங்கிகளாகவே பயன்படுத்தி வருவதாகக் குற்றஞ்சாட்டியுள்ளார்.

இராமர் கோயில் இருந்த இடத்தில் முஸ்லிம்களின் மசூதி கட்டப்பட்டுள்ளதெனக் கூறி 1992 இல் இந்துக்களால் அயோத்தியிலுள்ள பாபர் மசூதி இடிக்கப்பட்டது.

எனினும் அந்த இடத்தில் மீண்டும் இராமர் கோயில் கட்டக் கூடாதென முஸலிம்கள் கூறியதையடுத்து அப்பகுதிகளில் அடிக்கடி இந்துக்களுக்கும், முஸ்லிம்களுக்குமிடையில கலவரங்கள் இடம்பெற்று வருகின்றன.

இந்நிலையில், விஸ்வஹிந்துப் பரிசத்தினர் அயோத்தியில் இராமர் கோயில் கட்ட மத்திய அரசிடம் அனுமதி கோரியிருந்தனர்.

எனினும் இதற்கான அனுமதி இதுவரை வழங்கப்படாத நிலையில் விஸ்வஹிந்துப் பரிசத்தின் பொதுச் செயலர் இவ்வாறு கூறியுள்ளார்.

(து-2)



கடந்த சனிக்கிழமை ஈராக்கில் உள்ள அமெரிக்கப் படையினரால் கைது செய்யப்பட்ட முன்னாள் அதிபர் சதாம் ஹுசைன் ஒளிந்திருந்த பாதாள அறையின் வெளிப்புறத் தோற்றம்.

# தெற்காசிய நாடுகளுக்கு பொதுவான நாணயம்

## பிரதமர் வாஜ்பாய் கருத்து

(புதுடில்லி)

தெற்காசிய நாடுகளுக்கான பொது நாணயம் ஒன்றை அறிமுகப்படுத்திக் கொள்வதுடன் வர்த்தகத்திற்கான தடைகளும் நீக்கப்பட வேண்டுமென இந்தியப் பிரதமர் அடல் பிஹாரி வாஜ்பாய் தெரிவித்துள்ளார்.

ஹிந்துஸ்தான் ரைம்ஸ் பத்திரிகையின் ஏற்பாட்டில் புதுடில்லியில் நடைபெற்ற அமைதி முயற்சியின் முனனேற்றம் குறித்த மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

உலகமயமாக்கலுக்கான தேவைகளும், மக்களின் விருப்பங்களும் இணக்கமான முறையில் ஒருங்கிணைந்த் தெற்காசியாவிற்கும், சக்திவாய்ந்த அதன் செயற்பாடுகளுக்கும் வாய்பளிக்க தனது இந்தக் கருத்து வழிவகுக்குமென அவர் தனது உரையில் தெரிவித்தார்.

இந்த மாநாட்டில் அமெரிக்காவின் முன்னாள் வெளிவிவகாரத் துறைச் செயலர் மாடெயின் அல்ப்ரைட், அமெரிக்காவின் வெளிவிவகாரக் குழுத் தலைவர் ரிச்சர்ட் ஹர்ஷ் ஆகியோரும் கலந்து கொண்டு உரையாற்றியமை இங்கு குறிப்பிடத்தக்கது. (து-2)

# அதிபர் முஷாரப் மீது குண்டுத் தாக்குதல் அவர் அதிர்ஷ்டவசமாக உயிர் தப்பினார்

(இஸ்லாமபாத்)

பாகிஸ்தான் அதிபர் பர்வேஷ்



முஷாரப்பை குறிவைத்து நடத்தப்பட்ட குண்டுத் தாக்குதலிலிருந்து அவர் அதிர்ஷ்டவசமாக உயிர்பிழைத்துள்ளார்.

இஸ்லாமபாத்திலிருந்து 2 கிலோமீற்றர் தொலைவிலுள்ள கராச்சி நகரில் இருந்து ராவல்பெண்டிக்கு முஷாரப சென்றுகொண்டிருந்த சமயமே இக்குண்டுத் தாக்குதல் இடம் பெற்றுள்ளது.

முஷாரப்சென்று கொண்டிருந்த வாகனத் தொடரணியை பின் தொடர்ந்த வாகனமொன்று முஷாரபபின் வாகனத்தை கடந்த சில செக்கன்களில் அதிலிருந்த குண்டு வெடித்துள்ளது.

இக்குண்டு பொருத்தப்பட்ட வாகனம் முஷாரப்பையே குறிவைத்து வந்துள்ளதெனவும் இது ஒரு தீவிரவாத நடவடிக்கையெனவும் பாகிஸ்தானின் இராணுவப் பேச்சாளர் மேஜர் ஜெனரல சௌஹான் சுல்தான் தெரிவித்துள்ளார்.

எனினும் இத்தாக்குதலால் முஷாரப்பின் உயிருக்கு எந்தப் பாதிப்பும் ஏற்படவில்லையெனவும் அவர் எந்த வகையிலும் மனந் தளர்வடையவில்லையெனவும் அந்த இராணுவப் பேச்சாளா மேலும் கூறியுள்ளார்.

இதேவேளை, கடந்த சில மாதங்களுக்கு முன்னரும் முஷாரப்பை கொலை செய்ய இவ்வாறு மேற் கொள்ளப்பட்ட தீவிரவாதிகளின் தாக்குதல் தோல்வியில் முடிவடைந்தமை தெரிந்ததே.

(து-9)

### சாலியபுரப்பகுதியில்

## மோட்டார் குண்டு வெடிப்பு ஒருவர் உயிரிழப்பு; இருவர் காயம்

(அனுராதபுரம்)

அனுராதபுரம் சாலியபுரப்பகுதியில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற மோட்டார் குண்டு வெடிப்புச் சம்பவத்தில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூவரில் சிறுமி ஒருவர் உயிரிழந்துள்ளதுடன், மேலும் இருவர் படுகாயமடைந்துள்ளனர்.

இச்சம்பவம் பற்றித் தெரிய வருவதாவது, சம்பவத்தில் உயிரிழந்த சிறுமியின் இரும்பு வியாபாரியான தந்தை தனது வீட்டிற்கு அருகில் உள்ள இராணுவ முகாமிற்கு அண்மித்த பகுதிகளில் இரும்புப் பொருள்களை சேகரித்து வந்தார்.

பின்னர் அப் பொருள்களை தரப்படுத்தி அடுக்கும்படி தனது பிள்ளைகளைப் பணித்தார். தந்தையின் பணிப்புரைக்கு அமைய இரும்புப் பொருள்களைத் தரம்பிரித்து பிள்ளைகள் அடுக்கும் போது, அப்பொருட்களுடன் பொருட்களாக இருந்த மோட்டார் குண்டு வெடித்ததில் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இச் சம்பவத்தில் காயமடைந்த இருவர் அனுராகபுரம் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். அத்துடன் இது தொடர்பான விசாரணைகளை அனுராதபுரப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (தி-61)

தேர்தலை எதிர் கொள்ள ரணில் தயாராக உள்ளாரா?




### நட்புறவை வளர்க்கலாம் வருக!

# பாலாவின் கோரிக்கை குறித்த இந்தியாவின் பதில் விரைவில்

(கொழும்பு)

**இந்தியா தம்முடன் நட்புறவை வளர்த்துக்கொள்ள முன்வரவேண்டும் என தமிழீழ விடுதலைப்புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் விடுத்த வேண்டுகோள் குறித்து இந்தியா ஆராய்ந்து வருவதாக தெரிவிக்கப்படுகிறது.**

**அண்மையில் லண்டனில் நடைபெற்ற மாவீரர் தின நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றிய தமிழீழ விடுதலைப்புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் "விடுதலைப் புலிகளுடன் நட்புறவை வளர்த்து தமிழ் மக்களுக்கு நேசக்கரம் நீட்ட இந்தியா முன்வர வேண்டும் என பகிரங்கமாக அழைப்பு விடுத்தார்.**

இத்தகைய அழைப்புக் குறித்து சர்வதேச நாடுகள் பலவும் கவனம் செலுத்தி வருகின்றன.

பயங்கரவாதிகள் எனத் தம்மை விமர்சித்து வரும் இந்தியாவுடன், நட்புறவை ஏற்படுத்த விடுதலைப் புலிகள் தயாராக உள்ளதாக அறிவித்திருப்பது, அவர்களுடைய விட்டுக்கொடுக்கும் மனப்பான்மையை அதாவது தமது மக்களின் உரிமையைப் பெற்றுக்கொடுக்கவும், நிரந்தர சமாதானத்தை ஏற்படுத்தவும் எந்தவொரு எதிரியுடனும் பகைமையை மறந்து நல்லுறவை வளர்க்கத் தயார் என்பதை விடுதலைப் புலிகள் சொல்லாமல் சொல்லியிருப்பதை உணரமுடிகின்றதாக இந்திய இராஜதந்திரிகள் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

அத்துடன், ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க மூன்று முக்கிய அமைச்சுக்களைப் பொறுப்பேற்றமையினை அடுத்து தென்னிலங்கையில் ஏற்பட்டுள்ள அரசியல் நெருக்கடி நிலையைத் தணித்து மீண்டும் சமாதானப் பேச்சுவார்த்தையை ஆரம்பிக்கவேண்டும் என சர்வதேச நாடுகள் பலவும் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவிற்கும், பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிற்கும் அழுத்தம் கொடுத்து வருகின்றன.

இத்தகையதொரு நிலையில் இந்தியாவும் இலங்கையில் ஏற்பட்டுளள அரசியல் சர்ச்சை குறித்து கவனம் செலுத்தி வருவதாகவே தெரிவிக்கப்படுகிறது.

தமிழீழ விடுதலைப் புலிகளின் அழைப்பை ஏற்பதா? இல்லையா? என்பது குறித்து இந்தியா மிக அவதானமாக ஆராய்ந்து வருவதாகவும், விரைவில் தமது நிலைப்பாட்டைப் பகிரங்கமாக அறிவிக்கும் எனவும் எதிர்பார்க்கப்படுகிறது.

இதேவேளை, தமிழீழ விடுதலைப் புலிகள் தம்முடன் நட்புறவை வளர்க்குமாறு இந்தியாவிற்கு அழைப்பு விடுத்ததனை அடுத்து தென்னிலங்கையில் உள்ள சில இனவாதக் கட்சிகள் குறிப்பாக சிஹல உறுமய, ஜே.வி.பி., பிக்குமார் முன்னணி ஆகியன பெரும் குழப்பத்திற்குள்ளாகியிருப்பது கவனத்தில் கொள்ளத்தக்கது.

இந்நிலையிலேயே கடந்தவாரம் இலங்கைக்கான இந்தியத் தூதுவர் நிருபம்சென்னை இக் கட்சிகள் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளன.

இலங்கைப் பிரச்சினையில் இந்தியா உடனடியாகத் தலையிட வேண்டும் என்றும் வடக்கு - கிழக்கு மாகாணத்தை தனித்தனியாகப் பிரிக்க இந்தியா முன்வரவேண்டும் என்றும், விடுதலைப் புலிகளின் இடைக்கால நிர்வாக யோசனைகள் தனிநாட்டிற்கு வழிவகுத்திருப்பதாகவும் விமர்சித்து மகஜர் ஒன்றையும் கையளித்திருந்தமையானது இந்திய அரசிற்கு மனமாற்றத்தை ஏற்படுத்திவிடுமோ என்ற அச்சமும் தற்போது தமிழர்கள் மத்தியில் எழுந்திருப்பதாகவும் மேலும் தெரிவிக்கப்படுகிறது. (உ-63,10)

## அரசியல் கட்சிகளுடன் கூட்டுச்சேர்வது சுதந்திரக் கட்சிக்கு புதிய விடயமல்ல

### எதிர்க்கட்சித் தலைவர் கண்டியில் தெரிவிப்பு

(கொழும்பு)

ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கத்தின் மக்கள் விரோத நடவடிக்கைகளை கட்டுப்படுத்தும் முகமாக சகல கட்சிகளின் ஒத்துழைப்பைப் பெறுவது ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொறுப்பும் கடமையும் என எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

கண்டி மாகியாவையில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு பேசுகையில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அங்கு தொடர்ந்து பேசிய அவர், மக்களின் தேவை கருதி இவ்வாறான கூட்டுகளை ஏற்படுத்துவது ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கு புதிய விடயமல்ல.

நாட்டின் சகல துறைகளிலும் வீழ்ச்சி ஏற்படும் போது அதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையில் கட்சிகளை ஒன்றிணைக்கும் சம்பவங்கள் இதற்கு முன்னரும் இடம்பெற்றன.

மக்களுக்குப் பல நிவாரணங்களை வழங்கி அவர்களை தம்வசம் திருப்பிக் கொள்வதில் ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கம் வெற்றி கொண்டுவிடுமோ என்ற அச்சம் எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினர்கள் மத்தியில் நிலவி வந்தன.

ஆனால், அரசாங்கத்தால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள 2004ஆம் ஆண்டுக்கான பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்டம் வெறுமையானது என்பதை மக்கள் புரிந்துகொண்டதைத் தொடர்ந்து இவ் அச்சம் நீங்கியுள்ளது.

பாதுகாப்பு, மக்கள் தொடர்பாடல, உள்துறை ஆகிய மூன்று அமைச்சுக்களை ஜனாதிபதி பொறுப்பேற்றுக் கொண்டது காலத்தின் தேவை கருதியே.

இவற்றில் பாதுகாப்பு அமைச்சை மீண்டும் தம்வசப்படுத்தி, புலிகளுக்கு நாட்டை வழங்கும் முயற்சிகளில் பிரதமர் மீண்டும் ஈடுபட்டு வருகிறார். இதற்கு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி ஒருபோதும் அனுமதி வழங்காது எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (தி-61)

## மக்களின் நலன் கருதி...

### மக்கள் பயணத்தின் போது தமது வீட்டுப்பயன்பாட்டிற்கெனக் கொண்டுவரும் பொருள்கள் மீதான தீர்வை விலக்கு

02. சிறீலங்காவிலிருந்து இடமாற்றம் பெற்றுவரும் அரச திணைக்கள, அரச சார்பற்ற நிறுவனப் பணியாளர்கள் தாம் பயன்படுத்திய பொருள்களைக் கொண்டுவரும் போது அவற்றிற்குத் தீர்வை விலக்களிக்கப்படும்.

03. தமிழீழத்தில் நிலையாக வதியும் நோக்குடன் சிறீலங்காவிலிருந்தோ வேறு நாடுகளிலிருந்தோ வருவோர் தாம் பயன்படுத்திய பொருள்களைக் கொண்டு வரும் போது, அப்பொருள்களுக்குத் தீர்வை விலக்களிக்கப்படும்.

04. கல்வி நோக்கத்திற்காகக் கொண்டு வரும் கணனிகளுக்கும் துணைப்பொருள்களுக்கும் தீர்வை விலக்களிக்கப்படும்.

குறிப்பு:-

01. தீர்வை விலக்குப் பெறுவதற்குரிய பொருள்களைக் கொண்டுவரும் போது பொருள்களைக் கொண்டு வருபவரின் பெயர், அடையாளஅட்டை எண் என்பன குறிப்பிடப்பட்டுள்ள முறையான சிட்டைகளைக் (கடையின் பெயர், சிட்டைத் தொடரெண் என்பன தெளிவாக இருத்தல் வேண்டும்) கொண்டு வருதல் வேண்டும்.

02. பயணிகளுக்கு வழங்கப்படும் தீர்வைச் சலுகைகளை வாணிப நோக்கத்திற்காகப் பயன்படுத்தல் கூடாது.

### அரச திணைக்களங்கள், அரசசார்பற்ற நிறுவனங்கள் கொண்டு வரும் பொருள்கள் மீதான தீர்வை விலக்கு

01. அரச திணைக்களங்கள் முன்னொப்புதலுடன் திணைக்களப் பயன்பாட்டிற்கெனக் கொண்டுவரும் பொருள்கள்.

02. அரச சார்பற்ற நிறுவனங்கள் முன்னொப்புதலுடன் மக்கள் நலப் பயன்பாட்டிற்கும் நிறுவனப் பயன்பாட்டிற்கும் கொண்டுவரும் பொருள்கள்.

## போராட்டங்களை நிறுத்தி பொருளாதாரத்தை வளம்படுத்துக

### கல்வி அமைச்சர் தெரிவிப்பு

(கொழும்பு)

போராட்டங்களையும், ஆர்ப்பாட்டங்களையும் புறந்தள்ளிவிட்டு மக்களின் வாழ்க்கைத் தரத்தையும், பொருளாதாரத்தையும் கட்டியெழுப்ப வேண்டியது அரசியல்வாதிகளின் பொறுப்பாகும்.

இவவாறு கல்வி அமைச்சர் கருணாசேன கொடித்துவக்கு நவகமுவரஜ மகாவிகாரையில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற வைபவமொன்றில் கலந்து கொண்டு பேசுகையில் தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில், அரசியல் ரீதியிலான போராட்டங்கள் மூலம் மக்களின் மனங்களை வென்றெடுப்பது இலங்கை வரலாற்றில் இடம்பெற்று வரும் முக்கிய அம்சமாகும்.

போரினால் பாதிக்கப்பட்டுள்ள மக்களின் பொருளாதாரமும், கலாசாரமும் ஒரே நேரத்தில் முன்னெடுக்கப்படக் கூடிய விடயங்கள்.

இதேவேளை, இதனை இலக்காகக் கொண்டே ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கம் கடந்த இரு வருடங்களாக செயற்பட்டு வருகின்றது.

ஆனால், சில இனவாத அரசியல் கட்சிகள் இதனை தவறாகப் புரிந்து கொண்டு பிரதமரையும், ஐக்கிய தேசியக்கட்சியையும் இழிவுபடுத்தி வருகின்றன.

சமாதானத்தைக் குழப்பும் நோக்குடனேயே ஜனாதிபதி 3 அமைச்சுக்களையும் தனது பொறுப்பில் எடுத்தார். இதனை சர்வதேச நாடுகள் நன்கு உணர்ந்துள்ளன என அவர் மேலும் தெரிவித்தார். (தி-61)

புரந்தார்கண் நீர்மல்கச் சாகிற்பின் சாக்காடு
இரந்துகோள் தக்கது உடைத்து
-குறள்-

## வலம்புரி

### ஆயுதக்கொள்வனவு எதற்காக?

ஆயுதக்கொள்வனவிற்காக இராணுவ உயரதிகாரிகள் குழுவொன்று சீனாவுக்குப் புறப்பட்டுள்ளது. சமாதான முயற்சிகள் முன்னெடுக்கப்பட்டதின் விளைவாக அரசும், விடுதலைப்புலிகளும் யுத்தநிறுத்தத்தைக் கடைப்பிடித்துவரும் வேளையில், ஆயுதக் கொள்வனவில் அரசுகாட்டும் அக்கறையும், ஆர்வமும் பல்வேறு சந்தேகங்களுக்கு வழி சமைத்து விடுகிறது. முப்படைகளுக்கும் தேவையான ஆயுதங்களை கொள்வனவு செய்வதற்காக சீனா சென்றுள்ள இராணுவ உயரதிகாரிகள் அடங்கிய குழு பாதுகாப்பு அமைச்சை ஜனாதிபதி பொறுப்பேற்றதின் பின்னர் அங்கு சென்று இருந்தாலும், சீனாவில் ஆயுதக் கொள்வனவை மேற்கொள்ளும் முடிபு ஐக்கிய தேசிய முன்னணி அரசால் எடுக்கப்பட்டதொன்றாகும்.

அரசும், விடுதலைப்புலிகளும் புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒன்றைச் செய்து கொண்டாலும்,படைபலத்தை அதிகரிப்பதில் முப்படைத் தளபதிகளும், ஆட்சிப்பீடத் தலைவர்களும் அதீத அக்கறை கொண்டு செயற்படுகின்றனர். குறிப்பாக கடற்படைத் தளபதி தயாசந்தகிரி தனது தலைமையில் உள்ள கடற்படையை நவீனமயப்படுத்த வேண்டும் என ஜனாதிபதிக்கும், பிரதமருக்கும் அழுத்தம் கொடுத்து வருகிறார்.

விடுதலைப்புலிகளின் கடற்புலிபடையணியை வெற்றி கொள்வதாயின் அதற்கு கடற்படையை நவீனமயப்படுத்த வேண்டும் என்பது அவரது நியாயம். இலங்கையின் இறைமை, பாதுகாப்பு என்பனவற்றை உறுதிப்படுத்துவதற்காக கடற்படையை நவீனமயப்படுத்த வேண்டும் என தளபதி தயாசந்தகிரி கேட்டிருந்தால், அஃது ஒரு தளபதிக்கு இருக்கக் கூடிய தார்மீகப் பொறுப்பின் சார்பான கோரிக்கை என எடுத்துக் கொள்ளலாம். ஆனால், தளபதி தயாசந்தகிரி அவ்வாறான கோரிக்கை எதனையும் முன்வைக்காமல், விடுதலைப் புலிகளின் கடற்புலி படையணியை எதிர் கொள்வதற்கு கடற்படையை நவீன மயப்படுத்தல் வேண்டும் என கோரியிருப்பது இங்கு ஆழ்ந்து சிந்திப்பதற்கு உரியது.

அதாவது, கடற்படைத் தளபதி முன்வைத்த கோரிக்கை யுத்தம் நடந்து கொண்டு இருக்கும் வேளையில் விடுக்கப்பட்டதல்ல. மாறாக அரசும் புலிகளும் யுத்தத்தை நிறுத்தி சமாதானப் பேச்சுக்களை ஆரம்பித்து இருந்த வேளையில் முன்வைக்கப்பட்டதாகும் சமாதானச் சூழ்நிலையில் முன்வைக்கப்பட்ட கோரிக்கை இரண்டு அர்த்தம் கொண்டது. அதாவது விடுதலைப்புலிகளை கடற்படை தளபதி நம்பவில்லை என்றோ அல்லது விடுதலைப்புலிகள் யுத்தநிறுத்தத்தை கடைப்பிடித்து வரும் வேளையில் கடற்படையை பலப்படுத்தி விடவேண்டும் என்ற நோக்கிலோ விடுக்கப்பட்டதாக கருதிக் கொள்ள முடியும்.

இதில் எதுதான் சரியானதாயினும் அவை இரண்டுமே சமாதானத்தை ஏற்படுத்துவதற்கானவை அல்ல என்பது இங்கு நோக்குதற்குரியது.


# நீரிழிவால் பீடிக்கப்பட்டவர்கள் கால்களைப் பாதுகாப்பது அவசியம்

## மருத்துவ விளக்கம்

டாக்டர் வினுஅப்ரஹாம்

நரிழிவு நோய் என்றால் உடலில் சர்க்கரைச் சத்து அதிகம் என்பது இன்று கிராமத்திலுள்ள பாமர மக்களுக்கும் கூட புரிந்த ஒன்று. ஆனால் நீரிழிவு 'ஏன்' வருகிறது... எப்படி தீவிரமடைகிறது... என்பதெல்லாம் பரவலாகப் பலருக்குத் தெரியாத தகவல்கள்:

உலகின் மற்ற இனத்தவரை



கட்டை விரலுக்கும் இரண்டாம் விரலுக்குமிடையில் காயம்பட்ட பாதம்

யெல்லாம்விட இந்தியக் குடியினருக்கு மட்டுமேதான் நீரிழிவுடன் நெருக்கம் இருக்கிறது என்று கண்டறியப்பட்டுள்ளது. ஆனால் அதன் அடிப்படைக் காரணம் என்னவாக இருக்க முடியும் என்று யாராலும் கணிக்க முடியவில்லை.

நம் வயிற்றுப் பகுதியில் பாங்க்ரியாஸ் என்னும் சுரப்பியிலிருந்து சுரக்கும் திரவம்தான் இன்சுலின். சர்க்கரைச் சத்தைப் போதிய கலோரிகளாக மாற்றி ரத்தத்துடன் கலக்கச் செய்யும் பணியை இந்த இன்சுலின் மேற்கொண்டுள்ளது. ஆனால் சில எதிர்பாராத காரணங்களால் பாங்க்ரியாஸ் போதிய அளவு இன்சுலினை உற்பத்தி செய்யவில்லை எனில் அப்போது இரத்தத்தில் சர்க்கரையின் அளவு அதிகரித்து விடுகிறது. இந்த சந்தர்ப்பம்தான் நீரிழிவு நோயின் தொடக்கம்.

நீரிழிவு நோய் இல்லாத ஒருவர் நன்கு போதிய ஆகாரம் உண்டு வந்த போதும் எடை குறைவது, அடிக்கடி தாகம் எடுத்தல், அடிக்கடி சிறுநீர் கழிக்க உந்தப்படுதல் ஆகிய அறிகுறிகள் அவருக்குத் தெரிந்தால், நீரிழிவு நோய் அவர் உடலில் அப்போதுதான் குடியேறியுள்ளது என அறியலாம்.

நோயாளிகள் குறிப்பிடுவதுண்டு. தமக்கு நீரிழிவு நோய் நேர்ந்துள்ளது என்பது அவர்களுடைய பாத்ரூம் கொமேட்டில் எறும்புகள் மொய்க்கத் தொடங்கியதிலிருந்து தான் முதன் முதலாக தெரியவந்தது என்பார்கள். சிலர் ஆரம்ப நிலையிலேயே தன் நோயை உணர்வதுண்டு. சிலருக்கு நோய் முற்றிய போது தான் அதைப் பற்றியே தெரியவரும்.

இந்த நோய்த் தாக்கத்துக்கு மூன்றுவித சிகிச்சை முறைகள் நம் மருத்துவர்களால் பொதுவாக வழங்கப்படுகின்றன. இன்சுலின் ஊசிகள் ஆண்டி டயாபெடிக் மாத்திரைகள் உணவுக் கட்டுப்பாடு. அவரவரிடமுள்ள நீரிழிவு நோயின் தீவிரத்துக்கேற்ப இம்மூன்று முறையும் தனித் தனியாகவோ, மூன்றும் இணைந்த முறையிலோ சிகிச்சையளிக்கப்படுவது வழக்கம்.

நீரிழிவு நோய் வந்தால் மருத்துவரிடம் ஆலோசனை பெறலாம் என்றுதான் மக்கள் அறிந்துவைத்துள்ளனர். ஆனால் நீரிழிவு நோயினால் நேரும் கடுமையான பாதிப்புகள் அவர்களுக்குத் தெரிந்திருக்கவில்லை.

நீரிழிவு நோய் நம் உடலில் சிறுநீரகங்கள், கண்கள், நரம்புகள், இரத்த அணுக்கள் போன்ற பல்வேறு பாகங்களைப் பாதிப்புக்குள்ளாக்குகிறது என்பது சாதாரண மக்கள் அறியாமல் இருக்கிறார்கள்.

இதில் இரத்த அணுக்களும், நரம்புகளும் நீரிழிவினால் பாதிக்கப்படும்போது தான் அங்கு பிளாஸ்ரிக் சர்ஜனின் தேவை நேர்கிறது.


நரம்புகள் பாதிக்கப்படும்போது நீரிழிவு நோயாளிகளின் பாதங்கள் பாதிக்கப்படுகின்றன. இந்த நிலைமைக்கு ''பெரிஃபெரல் நியூரோபதி'' (Peripheral Neuropathy) என மருத்துவப் பெயரிட்டுள்ளனர்.

நரம்புகள் பாதிப்பால்-பாதங்கள் மரத்துப்போகின்றன. அதனால் வலி உணரபபட முடியாத குறை நேர்ந்து ஒரு முக்கியமான பாதுகாப்பு மண்டலம் பயனற்றுப் போகிறது.

பாதங்கள் மரத்துப்போக முக்கிய காரணம் இரத்த ஓட்டம் உடலெங்கும் சீராகப் பரவுவதில்லை என்பதே! அதுவும் நரம்புகளின் முடிவுப் பகுதியான பாதங்கள் கைவிரல் நுனிகள் போன்ற பகுதிகளுக்கு பொதுவாக இரத்த ஓட்டம் மிகச் சிறிய அளவிலேயே அமைகிறது.

நம் நாட்டில் இன்னொருவிஷயமும் நீரிழிவு நோயாளிகளுக்கு எதிராக இருக்கிறது. பொருளாதார நிலை காரணமாக நம்மில் பெரும்பாலோர் வெறுங்காலுடன் தான் நடப்பது வழக்கமாக இருக்கிறது. இது நிச்சயம் காயங்களை வரவேற்கும் முறையாகும். கற்கள், ஆணிகள், கண்ணாடிச் சில்லுகள் போன்றவை இதனால் நிச்சயம் காலைப் பதம்பாக்கும்.

தவிர தேள், பாம்பு போன்ற சில விஷஜந்துக்களும் கடிக்கலாம்.



மைக்ரோ சர்ஜரி மூலம் வயிற்றுப் பகுதி சதை எடுத்து புனரமைப்பு செயயப்படுகிறது.

சாதாரணமாக மனிதர்களுக்கு இந்த வகைக் காயங்கள் வேதனை தருபவை. நீரிழிவு நோயாளிகளுக்கு சட்டென காயங்கள் ஆறாத தன்மையினால் இவ்வகைக் காயங்கள் பெரும் வேதனை தருவனவாக அமைந்து வருத்தும்.

இந்த மாதிரித் தன்மையினால் சில நீரிழிவு நோயாளிகளுக்கு காலையே வெட்டி எடுத்துவிட வேண்டிய துரதிர்ஷ்ட நிலையும் நேர்கிறது.

மேல் நாடுகளில் நீரிழிவு நோயாளிகளுக்கென்று தனியே மருத்துவ மனைகள் இருக்கின்றன. குறிப்பிட்ட காலங்களில் அவர்கள் அங்கு சென்று தம பாதங்களின் ஆரோக்கியநிலையைப் பரிசோதித்து குறை ஏதும் இருப்பின் சரிப்படுத்திக்கொண்டு விட முடிகிறது. நம் நாட்டில் இப்படிப்பட்ட நவீன வசதிகள் இன்னும் ஏற்படவில்லை. என்பது வருந்தத்தக்கது.

மேற் சொன்னவிதக் காயங்களுடன் தாமதமாக வரும் தீவிர நோயாளிகளுக்கு வைத்தியர்கள் ஒரு குறிப்பிட்ட சிகிச்சை முறையைக் கையாள்வது வழக்கம்.

காயத்தைச் சுற்றியுள்ள பகுதிகளில் இருக்கும் இறந்துபோன செல்களையோ பாதிக்கப்பட்ட தோல் பகுதியையோ அங்கிருந்து அகற்றி இருதினம் கழித்து புனரமைப்புப் பணி துவங்கும். உடலின் இன்னொரு ஆரோக்கியமான பகுதியில் இருந்து தோலும் சதையும் கொஞ்சம் வெட்டி எடுக்கப்பட்டு காயங்களை மூடும்படி அமைக்கப்படும். இவ்வகை சிகிச்சை மைக்ரோசர்ஜரி எனப்படும். இம்மாதிரி சிகிச்சையினால் பல கால்களை வெட்டி அகற்றப் பட வேண்டிய ஆபத்தில் இருந்து காப்பாற்றப்படுகின்றனர்.

இதனால் ஒவ்வொரு நீரிழிவு நோயாளியின் காயத்திற்கும் மைக்ரோ சர்ஜரி மூலம் குணப்படுத்தி விட முடியும் என்று எண்ணலாகாது.

இந்தவகை சர்ஜரி மிகவும் சிக்கலானது-ஆபத்தானதும் கூட. இந்தச் சிகிச்சைபெற விரும்புவோர் மூன்று முதல் நான்கு வார காலம் மருத்துவமனையில் தங்கவேண்டி வரும். மிகவும் செலவு இழுத்து விடக்கூடியது. காலை அகற்றி விடுவதற்கு ஆகும். வைத்திய செலவை விட இந்த மைக்ரோ சர்ஜரிக்கு ஆகும் செலவு அதிகம் தான். இருந்தாலும் செலவிடும் பெருந்தொகையின் மதிப்பைவிட வெட்டப்படாது காக்கப்படும் கால்கள் மதிப்பு மிக்கவையாயிற்றே!

எனவே நீரிழிவு நோயாளிகள் தங்கள் கால்களைப் பராமரிப்பதில் மிகுந்த அககறை எடுத்துக்கொள்ள வேண்டும். காயம் நேர்ந்தாலோ, சீழ் பிடிக்கத் துவங்கினாலோ, வலி உணர்ந்தாலோ வீக்கம் ஏற்பட்டாலோ, முதல் காரியமாக ஒரு ஸ்பெஷலிஸ்டைப் பார்க்கப்போய் விடுவது மிகவும் நல்லது.

நீரிழிவு நோயை ஆரம்பத்தில் அறிய முடியாது. போய் பின்னர் கண்டறிந்தால் குற்றம் இல்லை. ஆனால் இந்த மாதிரிக் காயங்கள் ஏற்பட்டு மேற்படி அறிகுறிகள் தென்பட்டால் முறையிலேயே பாதுகாப்புகள் செய்துகொள்ளாமல் முற்றவிட்டு வேதனைப்படுவதுதான் தவறு. □

## ஊவாமாகாண நிதிமோசடி ஜனாதிபதி விளக்கம் கோருகிறார்

(கொழும்பு)

ஊவாமாகாணத்தில் இடம்பெற்ற 138 மில்லியன் ரூபா மோசடிக் குற்றச்சாட்டு தொடர்பாக ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க மாகாண முதலமைச்சரிடமும், மாகாண விவசாய அமைச்சரிடமும் விளக்கம் கோரியுள்ளார்.

ஊவாமாகாண முதலமைச்சர் ஏ.எம்.புத்ததாச, மாகாண விவசாய அமைச்சர் கித்திறி செனரத் அத்தநாயக்க ஆகியோர் விதை உருளைக்கிழங்கு கொள்வனவில் மோசடி செய்தனர் எனக் குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

இவ்விதை உருளைக்கிழங்குகளை முதலமைச்சர் நெதர்லாந்தில் இருந்து கொள்வனவு செய்தார்.

அத்துடன் ஊவாமாகாண சபையின் நீர்த்தேக்க புனரமைப்பு மற்றும் முதலமைச்சர் அலுவலக மறுசீரமைப்புத் தொடர்பாக ஒதுக்கப்பட்ட 95 இலட்சம்ரூபா நிதி குறித்தும் ஜனாதிபதி செயலகம் விசாரணை நடத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (தி-61)

## நிர்வாகசபை தெரிவு

(மயிலங்காடு)

அண்மையில் இடம்பெற்ற குப்பிளான் முதியோர் சங்கப் பொதுக் கூட்டத்தின் போது புதிய நிர்வாக சபை தெரிவுசெய்யப்பட்டுள்ளது.

மேற்படி சங்கத்தின் புதிய தலைவராக வி.பொன்னம்பலமும் செயலாளராக எஸ்.சொக்கலிங்கமும், பொருளாளராக சி.நாகேந்திரனும் தெரிவுசெய்யப்பட்டுள்ளதுடன், 6அங்கத்தவர்களைக் கொண்ட உறுப்பினர் சபையும் தெரிவு செய்யப்பட்டுள்ளது.

(தி-118)

## தினசரி தியானம்

### நன்மையும் தீமையும்

பிரம்மன் என்பது மேலான நன்மையாகும். ரஜஸும் தமஸும் தீமைக்குக் காரணங்களாக இருக்கின்றன. தீமை என்பது வெறும் தோற்றமே. இது நன்மையை விளங்க வைப்பதற்காக இருக்கின்றது. தீமையானது ஒருவகை ஞானமாகும். இது ஒப்பிடுதல் மூலமாக நன்மையினுடைய மேன்மைத் தன்மையைக் காட்டுகின்றது. ஒரு தீய மனிதன் வருங்கால முனிவன் ஆவான். எல்லாவற்றிலும் நன்மையையே காண். தீமை கண்டுபிடிக்கும் குணத்தை அழித்துவிடு. நன்மை கண்டு பிடிக்கும் குணத்தை விருத்திசெய். நன்மை தீமை ஆகியவற்றிற்கு மேல் எழும்பு.

சுவாமி சிவானந்தர்

## ஜே.வி.பியின் பிரசாரக் கூட்டங்கள் நேற்றுடன் நிறைவடைவு

### அக்கட்சி அறிவிப்பு

(கொழும்பு)

மக்கள் விடுதலை முன்னணியின் பிரசாரக் கூட்டங்கள் யாவும் நேற்றுடன் முடிவடைந்துள்ளதாக அக்கட்சி அறிவித்துள்ளது.

மக்கள் மத்தியில் தற்போதைய அரசியல் நிலைவரம் மற்றும் சமாதானச் செயற்பாடுகள் குறித்து இதுவரை சுமார் 10 ஆயிரம் கூட்டங்கள நடத்தப்பட்டன.

இம்மாதம் 2ஆம் திகதி முதல் வடக்கு-கிழக்கு மாகாணம் தவிர்ந்த அனைத்து மாகாணங்களிலும் இக் கூட்டங்கள் நடத்தப்பட்டன.

இக் கூட்டங்களின் போது நாட்டின் சமாதானத்துக்கும் ஒருமைப்பாட்டிற்குமான அழைப்புத் தொடர்பாகவும், தற்போதைய நாட்டு நிலைவரம் தொடர்பாக மக்கள் விடுதலை முன்னணியின் கருத்துக்கள் கொண்ட சுமார் 20 இலட்சம் துண்டுப் பிரசுரங்கள் விநியோகிக்கப்பட்டன எனவும் அக்கட்சியின் பொதுச் செயலாளர் தெரிவித்துள்ளார்.

(தி-60)

## குடும்பப் பெண் நீரில் மூழ்கி மரணம்

(யாழ்ப்பாணம்)

கிணற்றுள் தவறி வீழ்ந்த இளம் குடும்பப் பெண் ஒருவர் நீரில் மூழ்கி மரணமடைந்துள்ளார்.

நேற்று சங்குவேலி வடக்குப் பகுதியில் நடைபெற்ற இச்சம்பவத்தில் அதே இடத்தை சேர்ந்த ஒரு பிள்ளையின் தாயான அ.பாமினி (வயது 27) என்பவரே மரணமானவராவார்.

பிரஸ்தாப பெண் முகம் கழுவுவதற்காக கிணற்றடிக்குச் சென்றவேளை தவறுதலாக வீழ்ந்ததனாலேயே இம்மரணம் நேர்ந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (இ.4)

## மிதிவெடியில் குடும்பஸ்தர் கால் இழப்பு

(தனங்கிளப்பு)

கதியால் வெட்டச் சென்ற வயோதிபர் மிதிவெடி வெடித்ததில் தனது இடது காலை இழந்துள்ளார் இச்சம்பவம் நேற்று சாவகச்சேரி சிவன் கோவில் வீதியில் இடம் பெற்றுள்ளது.

இச்சம்பவத்தில் அதே இடத்தைச் சேர்ந்த எஸ்.சுப்பையா (வயது 58) என்பவரே தனது இடது காலை இழந்தவராவார்.

இவர் தனது குடியிருப்பிற்கு அண்மையில் உள்ள காணி ஒன்றில் கதியால் வெட்டிக்கொண்டிருந்த போதே இச்சம்பவம் இடம்பெற்றது.

இவர் மிதிவெடி வெடித்து கால் இழந்த நிலையில் இருந்தபோது மிதிவெடி அச்சம் காரணமாக இவரை எவரும் மீட்பதற்கு முன் வரவில்லை. எனினும் இன்னொரு வயோதிபர் துணிந்து சென்று அவரை மீட்டு சாவகச்சேரி மருத்துவ மனையில் அனுமதித்தார். பின்னர் அங்கிருந்து மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளார். (இ.37.4,5)

# கூட்டணி மத்திய குழுக்கூட்டம் அம்பாறையில் நடைபெறமாட்டாது

### சமரச முயற்சியில் நலன்விரும்பிகள்

(அம்பாறை)

எதிர்வரும் 21ம் திகதி ஞாயிற்றுக் கிழமை அம்பாறையில் நடத்துவதற்கு திட்டமிடப்பட்டிருந்த தமிழர் விடுதலைக் கூட்டணியின் மத்திய குழுகூட்டம் அன்றைய தினம் நடைபெறமாட்டாதென்று கூட்டணி வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இதனை அடுத்து தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவர் வீ.ஆனந்தசங்கரி தன்னுடன் கலந்து ஆலோசிக்காமல் இத்தகைய கூட்டங்களை நடத்தவேண்டாம் என்று கூட்டணி செயலாளர் இரா. சம்பந்தனுக்கு கடிதம் அனுப்பியிருந்தார். இந்நிலையில் மத்திய குழு கூட்டத்தை கூட்டுவதால் சட்ட சிக்கல்கள் எழலாம் என்பதனால் கூட்டத்தை நடத்துவதில்லை என்று முடிபு செய்யப்பட்டுள்ளதாகவும் கூட்டணியின் உயர்பீடம் தெரிவித்துள்ளது.

இதேவேளை தற்போது கூட்டணித் தலைவர் வீ.ஆனந்தசங்கரிக்கும் கட்சிக்கும் இடையிலான பிணக்குகளை மேலும் வளர விடாது சமரச முயற்சிகளில் கூட்டணியின் நலன் விரும்பிகள் ஈடுபட்டுள்ளதாகவும் தெரிவிக்கப் படுகிறது. (ம)

# ஜனாதிபதியின் நடவடிக்கைகளை பகிஷ்கரிக்கத் திட்டம்

### ஏ.எச்.எம்.பௌசி அறிவிப்பு

(கொழும்பு)

கொழும்பு மத்திய அமைப்பாளர் பதவியை ஜனாதிபதி மீண்டும் ஒப்படைக்கும்வரை ஜனாதிபதியால் ஏற்பாடு செய்யப்படும் எந்தவொரு கூட்டத்திலும் எத்தகைய நிகழ்வுகளிலும் தான் பங்கு பற்றப் போவதில்லை என பொதுஜன ஐக்கிய முன்னணியின் கொழும்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ஏ.எச்.எம்.பௌசி தெரிவித்துள்ளார்.

அவர்மேலும் தெரிவிக்கையில், நானும் மேவின் சில்வாவுமே சுதந்திரக்கட்சி சார்பில் அமைப்பாளர்களாக செயற்பட்டு வந்தோம். இதற்கிடையில் முன்அறிவிப்பு எதுவும் இன்றி ஜனாதிபதியால் மூன்றாவது நபர் இடைப்புகுத்தப்பட்டுள்ளார். ஹனிபாஇஷாக் என்பவரே இவராவார். இது ஜனாதிபதி என்னை பதவியில் இருந்து அகற்றுவதற்கு விரும்புகிறார் என்பதையே காட்டுகின்றது. ஆனால் இதனை எனக்கு அவர் முன்னரே கூறியிருக்க வேண்டும்.

இதனாலேயே ஜனாதிபதியின் கூட்டங்களை பகிஷ்கரிப்பதென முடிபு செய்துள்ளேன் என்று கூறினார். (இ)

# வான்-பஸ் விபத்து ஐவர் உயிரிழப்பு

(வறக்காப்பொல)

வற்காப்பொலப் பகுதியில் இடம் பெற்ற வாகன விபத்தில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூவர் உட்பட ஐந்து பேர் ஸ்தலத்திலேயே கொல்லப்பட்டுள்ளதுடன் மூவர் காயமடைந்துள்ளனர்.

கட்டுநாயக்கா விமான நிலையத்தில் இருந்து கேகாலை நோக்கிச் சென்ற வானும் கேகாலையில் இருந்து வறக்காப்பொலவை நோக்கி வந்து கொண்டிருந்த போக்குவரத்துச் சபை பஸ்வண்டியும் வறக்காப்பொலவில் 36வது மைல் கல்லுக்கு அருகே நேருக்கு நேர் மோதியதிலேயே இவ் விபத்து ஏற்பட்டுள்ளதாக வறக்காப்பொல பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி எஸ்.ஐ. இரத்தினாயக்கா தெரிவித்துள்ளார்.

றம்புக்கண, கிலிமனுவ பகுதிகளைச் சேர்ந்த ஒரே குடும்பத்தைச் சேர்ந்த ஷெரிப் மௌலானா சித்திக்நைனா, ஷெரிப் மௌலானா சித்திபௌஷியா, ஷெரிப் மௌளான ஷிப்றியா, முகம்மது முஸ்தான், ஷகிரா மதாயா ஆகியோரே விபத்தில் கொல்லப்பட்டவர்களாகும். (வ.தி.61)

## அனுமதிப் பரீட்சை

(யாழ்ப்பாணம்)

யாழ்.மத்திய கல்லூரியில் தரம் 6ற்கு மாணவர்களை அனுமதிப்பதற்கான பரீட்சை நாளை காலை 9.00 மணிக்கு கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இப்பரீட்சைக்கு விண்ணப்பிக்கத் தவறியோர் பரீட்சை நடைபெறுவதற்கு முன்னர் பாடசாலையில் விண்ணப்பப் படிவத்தைப் பெற்று விண்ணப்பிப்பதன் மூலம் பரீட்சைக்குத் தோற்ற முடியுமென அதிபர் க.இராசதுரை தெரிவித்துள்ளார். (இ.5)

## இதயத்துவாரத்துடன் பிறக்கும் குழந்தைகள்

(கொழும்பு)

நாட்டில் வருடம் தோறும் 1500க்கும் மேற்பட்ட குழந்தைகள் இதயத்தில் துவாரத்துடன் பிறப்பதாக பொதுஜன ஐக்கிய முன்னணி பாராளுமன்ற உறுப்பினர் நிமால் ஸ்ரீபாலடிசில்வா நேற்றுப் பாராளுமன்றத்தில் பேசும் போது குறிப்பிட்டுள்ளார்.

சுகாதாரப் போசாக்கு நலன்புரி சேவைகளுக்கான நிதி ஒதுக்கீடு தொடர்பாக குழுநிலை விவாதத்தின் போதே நிமால் ஸ்ரீபாலடி சில்வா மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். (ம)

## பஸ்ஸில் இருந்து போதைப் பொருள் மீட்பு

(கொழும்பு)

சொகுசு பஸ்மூலம் மன்னாரில் இருந்து நேற்று முன்தினம் கொழும்புக்குக் கடத்தப்பட்ட 76 லட்சம் ரூபா பெறுமதியான 3 கிலோ போதைப் பொருளை கொழும்புப் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

அத்துடன் மேற்படி பஸ் சாரதியையும் அதில் பயணம் செய்த இளைஞர் ஒருவரையும் கைது செய்து மளிகாகந்தை நீதி மன்றில் ஆஜர்படுத்திய பின்னர் விளக்கமறியலில் வைத்துள்ளதாகவ் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (உ.10)

## நாடுதழுவிய..

இதேவேளை யாழ்ப்பாணத்திலும் சுகாதார ஊழியர்கள் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டதனால் வைத்தியசாலைப் பணிகள் ஸ்தம்பிதம் அடைந்தபோதும் அவசர சிகிச்சைப் பணிகள் சுமாராக நடந்தன என்று ஆஸ்பத்திரி வட்டாரங்கள் தெரிவித்தன. (ம)

## காலவரையறை இன்றி...

ற்கு மீண்டும் பேசுவதற்கு தீர்மானித்துள்ளதாக ஜனாதிபதியின் ஊடகப் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதிக்கும், பிரதமருக்கும் இடையிலான இணக்கப்பாட்டை ஏற்படுத்தி இருவரையும் சகவாழ்வு அரசியலுக்கு கொண்டுவரும் முயற்சியில் மனோதித்தவெல-மலிக்சமரவிக்கிரம உயர்மட்டக் குழு தனது பேச்சுவார்த்தையை காலவரையறை இன்றி நீடித்திருக்கும் அதேவேளை ஐக்கிய தேசிய முன்னணியின் மூன்றாவது வரவு செலவுத் திட்டத்தின் மீதான விவாதம் நாளை பாராளுமன்றத்தில் நடைபெறவுள்ளது.

இவ்விவாதத்தின் போது பாதுகாப்பு உள்துறை அமைச்சுக்களுக்கான நிதி ஒதுக்கீட்டு குழுநிலை விவாதமும் இடம் பெறவுள்ளது இந்நிலையில் நிதி ஒதுக்கீடு தோற்கடிக்கப்படாமல் அதனை நிறைவேற்றுவதற்கு ஜனாதிபதி தனது பிரதிநிதியாக பிரதமர் ரணில்விக்கிரமசிங்காவை நியமித்து செயற்படவுள்ளார் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

வரவு செலவுத்திட்டம் நிறைவேற்றப்பட்டபின் மாகாண சபைத் தேர்தல் அல்லது பொதுத் தேர்தல் ஒன்றுக்கான அறிவிப்பை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா வெளியிடலாம் என்றும் அரசியல் ஆய்வாளர்கள் கருத்து வெளியிட்டுள்ளனர்.

தேர்தல் ஒன்றுக்கான அறிவிப்பை ஜனாதிபதி எந்நேரமும் விடுக்கலாம் என்பதை உறுதி செய்யும் வகையில் ஆளும் ஐக்கிய தேசிய முன்னணியும் ஜனாதிபதி தலைமையிலான பொது ஜன ஐக்கிய முன்னணியும் தேர்தலுக்கான ஆயத்தங்களை ஏற்கனவே ஆரம்பித்துள்ளனர். (ம)

## திருக்கோயில்...

தலைமையில் ஆறு விடுதலைப் புலி உறுப்பினர்களும், விசேட அதிரடிப்படையின் சார்பில் அக்கரைப்பற்று விசேட அதிரடிப்படை பொலிஸ் அத்தியட்சகர் உப்பிள் செனிவிரெத்தினா தலைமையில் எட்டுப் பேரும் கலந்து கொண்டனர்.

நேற்று நடைபெற்ற இக் கூட்டம் தொடர்பாக அக்கரைப்பற்று விசேட அதிரடிப்படை பொலிஸ் அத்தியட்சகர் தொடர்ந்துகருத்துத் தெரிவிக்கையில்,

அக்கரைப்பற்று சாதனா வீதியைப் பொது மக்கள் போக்குவரத்துக்குத் திறந்து விடப்பட்டது போல திருக்கோயில் வைத்தியசாலையின் ஒரு பகுதியில் அமைந்திருக்கும் விசேட அதிரடிப்படை முகாமையும், காஞ்சிரங்குடா அதிரடிப்படை முகாமையும் மிகவிரைவில் இடமாற்றுவதற்கு இரு தரப்பினருக்குமிடையில் இணக்கப்பாடு காணப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதனையடுத்து அடுத்த கூட்டம் அடுத்த மாதம் நடுப்பகுதியில் நடைபெறும் எனவும் தீர்மானிக்கப்பட்டது. (ம)

## கூட்டணி..

1970ம் ஆண்டு சிறிமாவோ பண்டாரநாயக்கா லங்கா சமசமாஜக் கட்சி, கம்யூனிஸ்ட் கட்சி ஆகியவற்றுடன் இணைந்து ஆட்சி அமைத்தார். 1994ம் ஆண்டும் பல கட்சிகளுடன் இணைந்து மக்கள் கூட்டணி அரசாங்கம் ஒன்றும் ஏற்படுத்தப்பட்டது.

பொது மக்கள் நன்மை கருதியே ஜனாதிபதி மூன்று அமைச்சுப் பொறுப்புக்களை ஏற்றுக் கொண்டார் என்று கூறிய எதிர்க் கட்சித் தலைவர் ஐக்கிய தேசிய முன்னணி அரசினால் சமர்ப்பிக்கப்பட்ட வரவு செலவுதிட்டத்தினால் பொது மக்களுக்கு எந்தவிதமான நன்மையும் ஏற்படப் போவதில்லை எனவும் தெரிவித்தார். (ம)

## காவல்துறையால் கசிப்பு கைப்பற்றப்பட்டது

(கிளிநொச்சி)

மல்லாவியில் கசிப்பு உற்பத்தி செய்யும் இடம்ஒன்று தமிழீழ காவல்துறையினரால் கண்டு பிடிக்கப்பட்டு பெருமளவு கசிப்பும், அவற்றுக்கான உற்பத்திப் பொருட்களும் கைப்பற்றப்பட்டுள்ளன.

மல்லாவி பாலைநகர் ஆற்றுப் பகுதியில் நேற்றுக் காலை தொடக்கம் மதியம்வரை துணுக்காய் காவல் துறையினர் மேற்கொண்ட தேடுதலின் போதே இவைகண்டு பிடிக்கப்பட்டுள்ளன. இதில் 35 லீற்றர் கசிப்பும், 350 லீற்றர் கோடாவும் கைப்பற்றப் பட்டுள்ளன கசிப்பு உற்பத்தியை மேற்கொண்டார்கள் என்ற சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்ட சிலர் மல்லாவி தமிழீழ மாவட்ட நீதிமன்றில் ஆஜர் படுத்தப்படவுள்ளனர். (5)


## யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம் இலங்கை

## கேள்வி அறிவித்தல்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் பெண்கள் விடுதியில் ஊறல் தொட்டி/வடிதல்பாத்தி நிர்மாணிப்பதற்கான அரக்கிடப்பட்ட கேள்விப் பத்திரங்கள் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கேள்விச்சபைத் தலைவரால் ஏற்றுக்கொள்ளப்படும்.

கட்டிட நிர்மாண வேலைகளுக்காக இக்ராட் (ICTAD) நிறுவனத்தில் பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தகாரர் கேள்விப் பத்திரங்கள் பெறத்தகுதியுடையவராவார்.

கேள்விப் பத்திரங்களை யாழ்ப்பாணப் பல்கலைக் கழக வேலைகள் எந்திரியலாளர் (குடிசார்) அவர்களிடமிருந்து 24-12-2003 வரை ஒப்பந்தகாரர் பதிவுப் புத்தகத்தையும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகக் காசாளர் கருமபீடத்தில் பின்வரும் வைப்பீடுகளுக்கான தொகையைப் பணமாகச் செலுத்திய பற்றுச்சீட்டையும் சமர்ப்பித்துப், பெற்றுக்கொள்ளலாம்.

1. மீளளிக்கப்படும் வைப்புத் தொகை ரூபா - 2,000/-
2. மீளளிக்கப்படாத வைப்புத் தொகை ரூபா - 300/-

பூரணப்படுத்தப்பட்ட கேள்விப்பத்திரங்கள் 06-01-2004 காலை 10.00 மணிக்குமுன் தலைவர்,கேள்விச்சபை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் அவர்களுக்குக் கிடைக்கக்கூடியதாக பதிவுத் தபாலில் அனுப்பப்படல் வேண்டும். அல்லது யாழ்ப்பாணப் பல்கலைக்கழகப் பதிவாளர் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியினுள் இடப்படல் வேண்டும்.

தேவைப்படின் கேள்விப்பத்திரங்களை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் திட்டமிடல் பகுதியில் வழமையான அலுவலக நேரங்களில் கட்டணம் ஏதுமின்றி கேள்விதாரர்கள் பரிசீலிக்க முடியும்.

தபால் பெட்டி இலக்கம்-57
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம். (C/6991)

பதிவாளர்,
யாழ்.பல்கலைக் கழகம்



## நல்லூர் பிரதேச சபை

## மீள் கேள்வி அறிவித்தல் 2004

01-01-2004ம் திகதி முதல் 31-12-2004ம் திகதி வரையான காலப்பகுதிக்கு வழங்குவதற்கான மீள் கேள்வி கோரப்படுகின்றது.

| | மீளளிக்கப்படாத கேள்விப் பத்திரப் பணம் | மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப் பணம் | ஏற்றுக் கொள்ளக் கூடிய ஆகக் குறைந்த தொகை (வற்வரி தவிர்ந்த) |
|---|---|---|---|
| 1.கொக்குவில் குளப்பிட்டிச் சந்தை, துவிச்சக்கர வண்டிப் பாதுகாப்பு நிலையத்துடன். | 500.00 | 5,000.00 | 1,75,509.00 |
| 2.கோண்டாவில் வடக்கு அரசடி வீதி மீன் சந்தை | 100.00 | 500.00 | 1,115.00 |
| 3.கொக்குவில் உப அலுவலக ஆட்டிறைச்சிக் கடை | 350.00 | 5,000.00 | 52,500.00 |

▲ கேள்விப் பத்திரம் வழங்கும் இறுதித் திகதி 22-12-2003 திங்கள் 12.00 மணி வரை
▲ கேள்விப் பத்திரம் ஏற்றுக் கொள்ளும் இறுதித் திகதி 23-12-2003 செவ்வாய் 10.00 மணி வரை
▲ கேள்விப் பத்திரம் திறக்கும் திகதி 23-12-2003 செவ்வாய் 2.00 மணி

மேலதிக விபரங்களை நல்லூர், கொக்குவில் பிரதேச சபை உப அலுவலகங்களிலும் பிரதேச சபை தலைமைச் செயலகத்திலும் காரியாலய நேரத்தில் அறிந்து கொள்ளலாம்.

செல்லையா செல்வரத்தினம்
செயலாளர்,
நல்லூர் பிரதேச சபை.

நல்லூர் பிரதேச சபை,
திருநெல்வேலி
15.12.2003

[C-6990]


இப்பத்திரிகை வலம்புரி அன். கோ ஸ்தாபனத்தாரால் இல.15 வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 16.12.2003 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.